# தமிழர் தகவல்

# TAMILS' INFORMATION

1991

இதழ் 3 ISSUE

ஏப்ரல் APRIL










பொங்கும் மங்களம்
எங்கும் தங்கிட
அனைவருக்கும்
பிரசோற்பத்தி வருட
புத்தாண்டு வாழ்த்துகள்!





## அகதிகள் உரிமை தினம் ஏப்ரல் 4ம் திகதி

"அகதிகள் உரிமை தினம்" கனடாவில் ஏப்ரல் மாதம் 4ம் திகதி வருடாவருடம் கொண்டாடப்படுகின்றது. இவ்வருட கொண்டாட்டத்தின் முக்கிய வைபவம் ஸ்காபுரோ கத்தோலிக்க குடிவரவு நிலையத்தில் ஏப்ரல் 4ம் திகதி வியாழக்கிழமை காலை பத்து மணிக்கு நடைபெறும். அகதிகளாக இருப்பவர்களும், அகதிகள் நலனில் அக்கறையுள்ளவர்களும் கலந்து கொள்ளலாம். மேலதிக விபரங்களை 757-7010 & 920-9250 ஆகிய இலக்கங்களில் பெறலாம்

இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி • A MONTHLY INFORMATION DIGEST

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர் தகவல்

P.O. Box - 3, Station 'F'
Toronto, Ontario
M4Y 2L4

Phone: (416) 920-9250

**தயாரிப்பு**
ஈழத்தமிழர் தகவல் நிலையம்
ரொறன்ரோ
&
கத்தோலிக்க
குடிவரவு நிலையம்
ஸ்காபுரோ
தொலைபேசி (416) 757-7010

**வெளியீடு**
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

**வடிவமைப்பு**
அகிலன் அசோஷியேட்ஸ்

**ஆசிரியர்**
எஸ்.திருச்செல்வம்

**உதவி ஆசிரியர்**
றஞ்சி

**விநியோக முகாமையாளர்**
எஸ். ரி. சிங்கம்
(416)921-7076

**படங்கள்**
கந்தவேள், மாறன், சிவா, சஞ்சயன்

**அச்சுப்பதிப்பு**
றிப்ளக்ஸ் பிறிண்டிங்
(416) 975-0196


## ஆசிரியரிடமிருந்து....................FROM THE EDITOR

தமிழர் தகவல் இதழ்களைப் பெறுவதிலும், அவற்றைக் கவனமாகப் பேணி வைப்பதிலும் ஆர்வம் கொண்ட பலரின் கடிதங்கள் எமக்குக் கிடைத்து வருகின்றது. ஆக்கபூர்மான ஆலோசனைகளை பலர் எழுத்தில் தெரிவித்துள்ளனர். அனைவரது அபிப்பிராயங்களும் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

அதே சமயம் எமக்குக் கடிதம் எழுதுபவர்கள் அதனை ஒரு ரகசிய ஆவணமாக எண்ணக்கூடாது. வெகுஜன தொடர்புச் சாதனங்களுக்கும் அதன் வாசகர்கள், ரசிகர்களுக்குமிடையில் மேற்கொள்ளப்படும் தொடர்புகளுக்குள் ரகஸியம் என்று ஒன்று இருக்க இடமில்லை.

தபாலில் வரும் கடிதங்கள் எல்லாவற்றையும் எம்மால் பிரசுரிக்க முடியாது. முடிந்தவரை ஒவ்வொரு இதழிலும் ஒரு கடிதத்தை பிரசுரிக்க முயற்சிப்போம்.

கடந்த இதழில் குறிப்பிட்டது போன்று அந்தந்தத் துறையுடன் சம்பந்தப்பட்டவர்கள் சிலர் இந்த இதழில் எழுதியுள்ளனர்.

பாரிஸ்டரும் சொலிஸிட்டருமான ஜெகன் என். மோகன் இந்த இதழில் "பிரஜாவுரிமை பெறுவது எப்படி" என்ற விடயம் பற்றி எழுதியுள்ளார். அனைவரும் அறிய வேண்டிய விபரங்களை உள்ளடக்கி, புரிந்து கொள்ளக் கூடிய வகையில் இக் கட்டுரை அமைந்துள்ளது.

அடுத்த நான்கு வருடங்களில் கனடாவுக்குள் குடிவரவாளர்களை ஏற்றுக் கொள்வது தொடர்பாக அமைச்சர் பாபரா மக்டுகல் தயாரித்துள்ள திட்டம் பற்றிய கட்டுரையொன்று இந்த இதழில் இடம்பெறுகின்றது. இலங்கையிலும் நைஜீரியாவிலும் பட்டதாரி ஆசிரியராகப் பணிபுரிந்தவரும், கனடிய குடிவரவுத் துறையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவருமான எஸ்.சிற்றம்பலம் இதனைத் தொகுத்துத் தந்துள்ளார்.

'சேக்கம்' நடத்திய சிறுதொழில் முயற்சி பற்றிய கருத்தரங்குத் தொகுப்பை எஸ்.ஜெகதீசன் எழுதியுள்ளார். யாழ்ப்பாணத்தில் இரண்டு தினசரிப் பத்திரிகைகளில் உதவி ஆசிரியராகப் பணியாற்றியவர் இவர். அவருக்கேயுரிய தனிப்பாணியில், இலகு-துள்ளல் நடையில் தொகுப்பு அமைந்துள்ளது.

இலங்கையிலும் பல வெளிநாடுகளிலும் பல் வைத்தியராகப் பணிபுரிந்த டாக்டர் அ. சண்முகவடிவேல், தற்போது கனடிய அரசின் அங்கீகாரம் பெற்று ரொறன்ரோவில் பல் வைத்தியராகப் பணிபுரிகின்றார். பல் நோய்-பற் சிகிச்சை சம்பந்தமான முக்கிய விடயங்களை கேள்வி பதில் வடிவத்தில் தந்துள்ளார்.

யோர்க் பல்கலைக் கழகத்தில் இலங்கை மாணவர் மன்றம் நடத்திய 'கலாசார இரவு' நிகழ்ச்சித் தொகுப்பை வாசகர்களுக்கு ஏற்கனவே அறிமுகமான தென்புலோலியூர் கிருஷ்ணலிங்கம் எழுதியுள்ளார்.

வழக்கம்போல வேறுபல தகவல்களும், நிகழ்வுகளும் இதழில் இடம்பெறுகின்றன. அடுத்து வரும் இதழ்களில் மேலும் பல விடயங்களைச் சேர்க்க முயற்சிப்போம்.

எஸ். திருச்செல்வம்


## TAMILS' INFORMATION

P.O. Box - 3, Station 'F'
Toronto, Ontario
M4Y 2L4

Phone: (416) 920-9250

**Produced by**
EELAM THAMIL INFORMATION CENTRE OF TORONTO (ETHIC)
&
CATHOLIC IMMIGRATION BUREAU SCARBOROUGH REGION
Phone: (416) 757-7010

**Published by**
THAMIL INFORMATION & RESEARCH UNIT (THIRU)

**Design**
AHILAN ASSOCIATES

**Editor**
THIRU S. THIRUCHELVAM

**Asst. Editor**
RANJI

**Circulation Manager**
S. T. SINGAM
(416) 921-7076

**Photos**
KANDAVEL, MARAN, SIVA & SANJAYAN

**Layout & Printers**
REFLEX PRINTING
(416) 975-0196


## புதுவருட விசேஷ வழிபாடுகள்
### முழுநாளும் ஆலயம் திறந்திருக்கும்

றிச்மன்ட் ஹில் இந்து ஆலயத்தில் புதுவருடப் பிறப்பை முன்னிட்டு இம மாதம் 14ம் திகதி ஞாயிற்றுக்கிழமை விசேஷ பூஜை, ஆராதனைகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

13ம் திகதி சனிக்கிழமை நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு நடைபெறும் விசேஷ பூஜையுடன் இவை ஆரம்பமாகின்றன.
14ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணி முதல் இரவு 9 மணி வரை கோவில் திறந்திருக்கும்.
அன்றைய தினம் காலை 7.30 மணி முதல் 8.30 மணி வரை சகல சந்நிதிகளிலும் அபிஷேகம் நடைபெறும்.
காலை 8.30 மணி முதல் 9.30 மணி வரை பூஜை நடைபெறும்.
காலை 9.30 மணிக்கு சுவாமி உள்வீதி உலா ஆரம்பமாகும்.
அன்றைய தினம் முழுவதும் அடியார்கள் அர்ச்சனை செய்வதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

## வளர்ந்தோர் கல்விப் பயிற்சி நிலையத்தில் பகலிலும் இரவிலும் பல்துறை வகுப்புகள்

வளர்ந்தோருக்கான பல்துறைக் கல்வியை வழங்கும் நிலையங்களில் ஒன்று ஸ்காபுரோவில் அமைந்துள்ளது. East York Adult Learning Centre என்று பெயரிடப்பட்டுள்ள மேற்படி நிலையம் டான்போத் அவினியூவில் (Danforth Avenue) 2944ம் இலக்கக் கட்டடத்தில் அமைந்துள்ளது. மெயின் ஸ்றீற் சப்வேயுக்கும் விக்டோரியா பார்க் சப்வேயுக்குமிடையில் இக்கட்டடம் இருக்கின்றது.

வளர்ந்தோருக்கான கல்விப் பயிற்சிகள் மட்டும் இங்கு நடத்தப்படுகின்றன. பகலிலும், இரவு வேளைகளிலும், சனிக்கிழமைகளிலும் இந்த வகுப்புகள் நடைபெறுகின்றன.

தனித்தனியாகவும், கூட்டாகவும், கல்வி, தொழில்துறை சம்பந்தமானவைகளாக வகுப்புகள் நடைபெறும். இந்த வகுப்புகள் பத்துவார காலப்பகுதியைக் கொண்டவை.

1991ம் ஆண்டுக்கான இரண்டாம் தொகுதிப் பயிற்சிகள் ஏப்ரல் மாதம் 23ம் திகதி ஆரம்பமாகவுள்ளன. வகுப்புகளில் பங்குபற்றுபவர்களின் பிள்ளைகளைப் பராமரிப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'லான்டட் பேப்பர்'காரரின் இலங்கைப் பயணங்கள்
## அகதிநிலை விண்ணப்பகாரர்களை பாதிக்கிறது

கனடாவில் வாழும் தமிழர்களில் பெரும்பாலானவர்கள் அகதிநிலை கோரி நிற்பவர்கள். இவர்களில் இருவகையினர் உண்டு. Backlog எனப்படும் தேக்க நிலையிலுள்ளவர்கள் ஒரு பகுதியினர். இவர்கள் 1986ம் ஆண்டு மே மாதத்துக்கும், 1988ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ம் திகதி நள்ளிரவுக்குமிடையில் கனடாவுக்கு வந்தவர்கள்.

இரண்டாம் பிரிவினர் 1989ம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிக்குப் பின்னர் இங்கு வந்தவர்கள். இப்போது வந்து கொண்டிருப்பவர்களும் இதில் அடங்குவர். இவர்களை குடிவரவுச் சட்டத்தின் கீழ் C-55 பிரிவு அகதி நிலைக் கோரிக்கையாளர் என்று அழைப்பர்.

தேக்க நிலை அகதிகளிலும், C-55 அகதிகளிலும் ஒரு குறிப்பிட்ட தொகையினர் ஏற்றுக் கொள்ளப்பட்டு, நிரந்தர வசிப்பிட உரிமைக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளனர். அதேசமயம் இவர்களில் ஒரு பகுதியினருக்கு Landed Paper எனப்படும் நிரந்தர வசிப்பிடத்துக்கான அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் பலர் இதனைப் பெறுவதற்கு ஏற்பாடாகியுள்ளது. இது ஒரு மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.

'எஸ்தி'

அதே சமயம் இங்கு அகதிநிலை கோரி நிற்கும் தமிழர்கள் பலர் எதிர்கொள்ளும் சில பிரச்சனைகளை இச் சந்தர்ப்பத்தில் முன்வைக்க வேண்டியது அவசியமாகத் தோன்றுகின்றது.

1989ம் ஆண்டு ஜனவரி மாதத்துக்குப் பின்னர் இங்கு வந்த தமிழர்களில், விசாரணைகள் முடிவடைந்த பின்னர் அகதி நிலைக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர்கள் நிலை என்ன? இவர்கள் ஏன் நிராகரிக்கப்பட்டனர்? இவர்களின் மேன்முறையீட்டுக்கு என்ன நடைபெறுகின்றது? இவர்களை வெளியேற்ற அல்லது நாடுகடத்த எடுக்கப்படும் நடவடிக்கைகளைத் தடுக்க முடியுமா?

தமிழர் தகவல் மார்ச் மாத இதழில் அகதிநிலை மனு நிராகரிக்கப்பட்டவர்கள் தொகைபற்றிய புள்ளி விபரங்களை வெளியிட்டிருந்தோம். இவர்களில் அநேகமானவர்களும் விஜில், சர்வதேச மன்னிப்புச் சபை ஆகியவற்றிடமே இறுதியாகச் செல்ல வேண்டியுள்ளது. ஈழத் தமிழர் தகவல் நிலையம், ஸ்காபுரோ கத்தோலிக்க குடிவரவு நிலையம் ஆகியவற்றிடம் உதவிகோரி வந்தவர்களும் விஜில் அமைப்பின் ஊடாக, மனிதாபிமான அடிப்படையில் கவனிக்கப்பட்டனர். இவர்கள் மீதான கருணை மனுக்கள் அமைச்சருக்கு அனுப்பப்படுவதே வழக்கம்.

இவ்வாறு கருணை மனு அனுப்பப்பட்ட சிலருக்கு இங்கு தங்கியிருக்கும் உரிமைக்கான Minister's Permit எனப்படும் அமைச்சரின் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. நாடு கடத்தலுக்கு திகதி நிர்ணயிக்கப்பட்ட சிலருக்கு, அந்த உத்தரவை அமைச்சர் இடைநிறுத்தம் செய்துள்ளார். இதனால், அகதிநிலை கோரிக்கை நிராகரிக்கப்பட்ட அல்லது நாடு கடத்தலுக்குத் திகதி நிர்ணயிக்கப்பட்ட சிலர் அதிலிருந்து விடுபட முடிந்தது. ஆனால் இப்போது நிலைமை மாறி வருகின்றது. இவர்கள் தொடர்பான கருணை மனுக்களைப் பரிசீலனை செய்ய குடிவரவு அமைச்சரின் அலுவலகம் மறுத்து வருகின்றது. "இலங்கைத் தமிழர்களுக்கு அவர்கள் நாட்டில் உயிரபாயம் இல்லை" என்று அதிகாரிகள் அடித்துக் கூறுகின்றனர்.

யாழ்ப்பாணக் குடா நாட்டைச் சேர்ந்த இளைஞன் ஒருவனின் நாடுகடத்தல் உத்தரவை, மனிதாபிமான அடிப்படையில் பரிசீலித்து நீதி வழங்குமாறு கடந்த மாதம் 'விஜில்' அனுப்பிய மனுவுக்கு, தொலைபேசி மூலம் அங்குள்ள அதிகாரி ஒருவர் மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வாறாக அதிகாரிகள் நடந்து கொள்வதற்குக் காரணம் என்ன?

கவனியுங்கள்-

கொழும்பில் கனடா தூதரகம் ஒன்று இயங்குகின்றது. கனடாவிலிருந்து இலங்கைக்குச் செல்லும் தமிழர்கள் பற்றிய விபரங்களை கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரிகள் ஊடாக இவர்கள் பெறுகின்றனர்.

கடந்த வருடத்தில் கனடாவில் 'லான்டட் பேப்பர்' பெற்ற சுமார் நூறுபேர் ஒரு சில வாரங்களுக்குள் கொழும்புக்கு விஜயம் செய்துள்ளதை கனடா தூதரகம் கவனித்துள்ளது. இந்த விடயத்தை தூதரக அதிகாரிகள் ஒட்டாவாவிலுள்ள அமைச்சரின் அலுவலகத்தினது கவனத்துக்கு கொண்டு வந்துள்ளனர்.

நடந்தது இதுதான்

கடந்த வருடம் 'லான்டட் பேப்பர்' பெற்றவர்கள், இங்கு அகதிகளாக வந்து, தாங்கள் இலங்கைக்குச் செல்ல முடியாது என்றும், அங்கு தங்களுக்கு உயிரபாயம் என்றும் கூறி, இங்கு ஏற்றுக் கொள்ளப்பட்டவர்கள். இதனால்தான் அவர்களுக்கு நிரந்தரமாக இங்கு வசிப்பதற்கு 'லான்டட் பேப்பர்' வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இவர்கள் 'லான்டட் பேப்பர்' கிடைத்ததும் இலங்கைக்குச் செல்கின்றனரென்றால் அதன் அர்த்தம் என்ன?

கனடிய அதிகாரிகள் கேட்கும் இந்தக் கேள்விக்கு என்ன பதில் கூறுவது?

லான்டட் பேப்பர் பெற்ற சிலரது பொறுப்பற்ற தன்மையினால், அகதிநிலை விசாரணையை எதிர்கொண்டிருப்பவர்களும், அகதி நிலை நிராகரிக்கப்பட்டு, நாடு கடத்தலை எதிர் நோக்கியிருப்பவர்களும் பாதிக்கப்படுகின்றார்கள் என்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியது எமது கடமையாகும்.

அகதி நிலைக் கோரிக்கை ஏற்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் 'லான்டட் பேப்பரை' ஒரு பிரயாணப் பத்திரம் என்று சிலர் நினைத்துச் செயற்படுவது போலத் தோன்றுகிறது. அவசிய தேவை கருதி, இலங்கை தவிர்ந்த வேறு நாடுகளுக்குப் பயணம் செய்வதால் யாரும் பாதிக்கப்படப் போவதில்லை. ஆனால் தங்களுக்கு உயிரபாயம் ஏற்படும் நாடு என்று கூறிய இலங்கைக்கே இவர்கள் நேரடியாகப் பயணம் செய்வதால், இங்கு அகதிநிலை கோரி நிற்பவர்களே நேரடியாகப் பாதிக்கப்படுகின்றனர்.

இதனை எவ்வாறு தடுக்கப் போகின்றோம். பூனைக்கு மணி கட்டுவது யார்?

## இந்து ஆலய இம்மாத உற்சவங்கள்

றிச்மன்ட் ஹில் இந்து ஆலய ஏப்ரல் மாத விசேஷ உற்சவ விபரங்கள் வருமாறு.

9 செவ்வாய் - சரவண உற்சவம் (பெருமாள்)
12 வெள்ளி - பிரதோஷம் (சிவன்)
13 சனி - சிவராத்திரி
14 ஞாயிறு - புதுவருடம் (அமாவாசை)
17 புதன் - கிருத்திகை (ஷண்முக அர்ச்சனை)
18 வியாழன் - சதுர்த்தி
26 வெள்ளி - சித்திரை பௌர்ணமி - பிரதோஷம்
10, 24, 25 ம் திகதிகளில் ஏகாதசி விரதம்

மேலதிக விபரங்களை 883-9109 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெறலாம்.

## தமிழில் வழிபாடு

ரொறன்ரோ மாநகரின் டவுன்ஸ்வியுவில் Shepperd Ave. West, 1875 இலக்கத்தில் அமைந்துள்ள இம்மானுவேல் தமிழ் நசரேயன் திருச்சபையில் மாதத்தின் முதலாம், மூன்றும் ஞாயிறு தோறும் பிற்பகல் 3:30 மணிக்கு தமிழில் இறை வழிபாடு நடைபெறும்.

ஏப்ரல், மே, மாதங்களில் நடைபெறும் வழிபாடு விபரங்கள்:
ஏப்ரல் 7 - ஞாயிறு பிற்பகல் 3:30 மணி - நற்கருணை
ஏப்ரல் 21 - ஞாயிறு பிற்பகல் 3:30 மணி - வழிபாடு
மே 5 - ஞாயிறு பிற்பகல் 3:30 மணி - நற்கருணை
மே 19 ஞாயிறு பிற்பகல் 3:30 மணி - வழிபாடு

மேலதிக விபரங்களை 494-6714 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெறலாம்.

## ஸ்காபுரோவில் சாயி பஜனை

ரொறன்ரோ சாயி சமித்தியினரால் சாயி பாபா பஜனை இரண்டு வாரத்துக்கு ஒரு தடவை ஸ்காபுரோவில் நடத்தப்பட்டு வருகின்றது. ஸ்காபுரோ வூபர்ன் கல்லூரி மண்டபத்தில் ஞாயிற்றுக் கிழமைகளில் பிப 6 மணி முதல் 7 மணி வரை பஜனை நடைபெறும். இந்த (ஏப்ரல்) மாதத்தில் 14ம் திகதி, 28ம் திகதி ஆகிய இரண்டு ஞாயிற்றுக்கிழமைகளிலும் சாயி பஜனை நடைபெறும்.

## தமிழ் சுவிசேஷ பெருங்கூட்டம்

கிறிஸ்தவ குடும்ப ஆராதனை ஸ்தாபனத்தினரால் நடத்தப்படும் 'தமிழ் சுவிசேஷ பெருங்கூட்டம்' அடுத்த (மே) மாதம் 17ம், 18ம் திகதிகளில் ஸ்கார்புரோவில் நடைபெறவுள்ளது. விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்: (416) 486-0810 அல்லது 484-1467


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடிய அரசின் அசமந்தப் போக்கினால் அகதிகள் அவதி நிலையில் வாழ்கின்றனர்

ரொறன்ரோ அகதிகள் விவகார அமைப்பின் (Toronto Refugee Affairs Council-TRAC) வருடாந்த மகாநாடு கடந்த மாதம் முதல் வாரத்தில் நடைபெற்றது.

மேற்படி நிறுவனமானது ரொறன்ரோ பெரும்பாகப் பகுதியில் அகதிகளுக்குச் சேவை புரியும் நாற்பத்தியிரண்டு அமைப்புகள், நிறுவனங்கள், சங்கங்கள் ஆகியவற்றை அங்கத்தவர்களாகக் கொண்ட ஒரு கூட்டமைப்பாகும்.

கடந்த பல வருடங்களாக பல நாட்டிலிருந்தும் கனடாவுக்கு வந்த அகதிகள் நலன் கருதி மேற்படி நிறுவனம் பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வந்துள்ளது. கடந்த மாதம் நடைபெற்ற இதன் வருடாந்த மகாநாட்டில் ஸ்பைடைனா ட்றனிற்றி பாராளுமன்ற உறுப்பினர் டன் ஹீப் பிரதம பேச்சாளராகப் பங்கு கொண்டு உரையாற்றினார்.

அகதிகளின் விசாரணைகளைத் தாமதமாக்குவதால் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளையும் இதனால் பல குடும்பங்கள் வருடக் கணக்கில் பிரிந்து வாழ்வதையும் டன் ஹீப் தமது பேச்சில் முக்கியமாகச் சுட்டிக் காட்டினார்.

"கனடிய குடிவரவுத் துறையினர் கனடிய சட்டங்களை அமல் செய்வதில் காட்டும் அசமந்தப் போக்கினால், ஆயிரக்கணக்கான அகதிகள் தங்கள் எதிர்காலம் பற்றி முடிவு தெரியாதவர்களாக வாழும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பலர் மனோவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். மனிதாபிமான அடிப்படையிலாவது இவ் விடயங்களைப் பரிசீலனைக்கு எடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்." என்றும் அவர் கூறினார்.

நாளுக்கு நாள் அதிகரித்துவரும் அகதிகளின் நலனை மனதிற் கொண்டு நடைமுறைச் சட்டங்களில் பல மாற்றங்களைக் கொண்டு வரவேண்டும் என்றும், இவ் விடயத்தில் ரொறன்ரோ அகதிகள் விவகார அமைப்பின் பங்களிப்பு அத்தியாவசியமானது என்றும் திரு. டன் ஹீப் குறிப்பிட்டார்.

TRAC நிறுவனத்தின் 1991-92ம் ஆண்டு காலப் பகுதிக்கான நிறைவேற்றுக் குழு இயக்குனர்களாக மேற்படி வருடாந்த மகாநாட்டில் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்: பெற்றிடிலியோ, நான்ஸி பொக்கொக், எஸ். (திரு) திருச்செல்வம், எலிஸபெத் கிளஸன், றெப் ஆம்ஸ்ரொங், எலன் ரேர்லி, சகோ. ஜோர்ஜ். இதில் முதல் நான்கு பேரும் கடந்த வருடமும் இப்பதவியை வகித்தவர்களாவர்.

# வெளிநாட்டு தொழிற் சான்றிதழ்களை மதிப்பீடு செய்ய தனியான அலுவலகம்

வெளிநாடுகளிலிருந்து கனடாவுக்கு வந்து குடியேறுபவர்களின் தொழிற் பயிற்சிச் சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களைப் பரிசீலித்து, மதிப்பீடு செய்து அறிக்கை சமர்ப்பிக்கவென தனியான அலுவலகம் ஒன்று ரொறன்ரோவில் இயங்குகின்றது. தொழில் அபிவிருத்தி அமைச்சின் கீழான தொழிற் பயிற்சிப் பிரிவு இதற்குப் பொறுப்பாகவுள்ளது.

விண்ணப்பத்தாரியின் தொழில் அனுபவம், பயிற்சி ஆகியவைகளின் அடிப்படையில் மதிப்பீடு நடத்தப்படும். முடியுமானால் தாங்கள் முன்னர் வேலை செய்த இடத்திலிருந்து சான்றுக் கடிதமொன்றைப் பெற்றுச் சமர்ப்பிப்பது வரவேற்கப்படும். அவ்வாறான கடிதமொன்றைச் சமர்ப்பிக்க முடியாது போனால், சம்பந்தப்பட்ட தொழிலில் விண்ணப்பதாரிக்குள்ள அனுபவம், ஆற்றல் ஆகியவைகளை அறிவதற்காக, அல்லது நிரூபிப்பதற்காக செயல் முறையில் பரீட்சையொன்றை அதிகாரிகள் நடத்துவர்.

விண்ணப்பத்தாரி தமது நாட்டில் பெற்ற தொழிற் பயிற்சியும், அனுபவமும் ஒன்ராறியோவின் தொழிற் பயிற்சிக்கு வேறுபட்டதாகும். சரிசமமான பயிற்சி, அல்லது சரியான தராதரமாகவிருந்தாலும் கூட, ஒன்ராறியோ மாநிலத்துக்குரிய தராதரத்தைப் பெறுவதற்கான பரீட்சையொன்றுக்கு ஆஜராராக வேண்டும். இந்தப் பரீட்சை ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு மொழியில் மட்டுமே நடைபெறலாம். ஆனால் மொழிபெயர்ப்பாளர் ஒருவரையும், அகராதி ஒன்றையும் கொண்டு வர அனுமதியுண்டு.

மேற்குறிப்பிட்ட தகுதிகாண் செயல்முறைப் பரீட்சையில் விண்ணப்பதாரி தேவையான தகுதியை பெறத் தவறினால், இங்கு நடத்தப்படும் தொழிற் பயிற்சியொன்றில் சேர முடியும். அதன் மூலம் ஒன்ராறியோ தராதரத்தைப் பெறலாம். விண்ணப்பதாரிகளின் முன்னைய அனுபவம், பயிற்சி ஆகியவைகளை அடிப்படையாக வைத்து புதிய பயிற்சி வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்ட தொழில் துறை மதிப்பீடு அல்லது தொழிற் பயிற்சி சம்பந்தமாக ஏதாவது அறிய விரும்பினால் அருகாமையிலுள்ள தொழில் அபிவிருத்தி அமைச்சின் அலுவலகம் ஒன்றுடன் தொடர்பு கொள்ளவும். இதன் மத்திய அலுவலகத்துடன் 965-4211 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம்.

தொழிற்துறை சம்பந்தமான பட்டங்கள், சான்றிதழ்கள் உட்பட்ட கல்வித் தகைமைப் பத்திரங்கள் வைத்திருப்பவர்கள் அந்தந்த துறைக்கென இயங்கும் அலுவலகங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டும். இது பற்றிய சரியான மேலதிக விபரங்களை ரொறன்ரோவிலுள்ள வரவேற்பு இல்லங்களுடன் (Welcome House) தொடர்பு கொண்டும் பெறலாம்.

## தமிழ் கல்விப் பணிப்பாளர் இருவர் கனடாவில்

இலங்கையில் கல்வி அமைச்சின் கீழ், கல்விப் பணிப்பாளர்களாகக் கடமையாற்றிய இரண்டு தமிழ் அதிகாரிகள் அண்மையில் கனடாவில் குடியேறியுள்ளனர்.

திருமதி. இரத்தினா நவரத்தினம், திரு.தி.மாணிக்கவாசகர் ஆகிய இருவரும் இந்த அதிகாரிகளாவர்.

திருமதி. இரத்தினா நவரத்தினம் யாழ்ப்பாண மாவட்டத்தில் நீண்ட காலம் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றியவர். இந்து மத தத்துவத்தில் நிரம்பிய ஈடுபாடு கொண்டவர். தமிழ் ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் பல கட்டுரைகளை எழுதியுள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய அனுபவமிக்க திரு. மாணிக்கவாசகர், கொழும்பில் கல்வி அமைச்சின் தமிழ்ப் பிரிவுப் பணிப்பாளராகவும் பல வருடங்கள் பணியாற்றியுள்ளார். தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் சரளமாகப் பேசும், எழுதும் ஆற்றல் மிக்கவர்.

## சென் ஜேம்ஸ் ரவுண் சுகாதாரக் கூட்டம்

ரொறன்ரோ சென். ஜேம்ஸ் ரவுணில் வசிக்கும் குடும்பங்களின் தேவையான சுகாதார வசதிகளுக்கான விடயங்கள் பற்றி அறிவதற்கான கூட்டமொன்று வெலஸ்லி வீதி கிழக்கிலுள்ள 200ம் இலக்கக் கட்டடத்தின் நில அறையில் (Basement) ஏப்ரல் மாதம் 6ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் நான்கு மணி முதல் ஆறு மணி வரை நடைபெறும்.

## வசந்தம் பிறந்துவிட்டது

வசந்தகாலம் (Spring) உத்தியோகபூர்வமாக மார்ச் மாதம் 21ம் திகதி காலை 1.51 மணிக்கு ஆரம்பமாகிவிட்டது. ஆனாலும் தற்போதைய குளிர் ஏப்ரல் மாத இறுதி வரை இருக்கும். எனவே குளிர்கால ஆடைகளையும், மேலங்கிகளையும் ஏப்ரல் இறுதிப் பகுதிவரை அணிவது நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவுக்குள் அடுத்த நான்காண்டு காலத்திலும் வருடாந்தம் 250,000 குடிவரவாளர் அனுமதி பெறுவர்

அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளில் ஓரளவு கூடுதலாக குடிவரவாளர்களை ஏற்பதற்கான தனது 1991-95 ஆண்டுகளுக்கான குடிவரவுத் திட்டத்தை கனடிய அரசு மிகவும் சிந்தித்தே தயாரித்துள்ளது என வேலைவாய்ப்பு குடிவரவு அமைச்சர் பாபரா மக்டுகல் கூறியுள்ளார்.

"வரவு செலவுத் திட்டத்தோடும் ஏனையவற்றோடும் சம்பந்தப்பட்ட வரையறுப்புகளை அனுசரித்து சகல கனடியர்களினதும் அபிப்பிராயங்கள், விருப்பங்கள், நோக்கங்கள் ஆகியவற்றை எடை போடுவதில் அரசு கஷ்டமான முடிவுகளை எடுக்க வேண்டியிருந்தது" என்கிறார் அமைச்சர்.

புதிய திட்டத்தின் கீழ், 1990இல் 200,000 இருந்து 1991 இல் 220,000க்கும் தொடர்ந்து 1995 மட்டுமுள்ள திட்ட காலத்தில் வருடா வருடம் 250,000 ஆகவும் குடிவரவு அதிகரிக்கப்படும்.

இந்நீண்ட காலத் திட்டத்தை தயாரிப்பதில் அமைச்சரவர்கள் பல மாகாணங்களையும் பரவலாக கனடிய சமுதாயத்தையும் ஈடுபடுத்தி தொடர்பாக ஆலோசனைகள் சம்பாஷணைகள் ஆகியவற்றை தொடக்கி வைத்தார். இவ்வாலோசனைகள், குடிவரவில் ஓர் நடுத்தர வளர்ச்சியைக் கொண்ட கொள்கைக்கு பரவலான ஆதரவு இருப்பதை வெளிப்படுத்தின.

"அளவான வளர்ச்சியை விடுவதன் மூலம், குடும்பம், அகதி, தனியானோர் ஆகிய வகுப்புகளான குடிவரவின் மூன்று பகுதிகளுக்கிடையேயுள்ள எங்கள் பாரம்பரிய சமரசத்தை மீளப்பெறவே முயற்சிக்கிறோம். இச்சமரசத்தை நிறைவேற்றுவதற்கு, குடும்ப குடிவரவின் தன்மையை மீளாய்வு செய்து, உண்மையான தங்கியிருத்தல் என்ற அளவுகோலைப் பாவித்து 'குடும்பம் என்பதை வரையறுக்க வேண்டியிருந்தது" என விளக்குகிறார் மக்டுகல்.

நடைமுறையில் இதன் கருத்து என்னவெனில், கனடியர்கள் வயது வரையறுப்போ அல்லது ஸ்பொன்சர் செய்பவர் கனடாவில் வசித்த கால வரையறுப்போ இல்லாமல் தங்கள் மனைவி/கணவன்; துணைவர்; தங்கியுள்ள பிள்ளைகள் ஆகியவர்களையும் வயது வரையறுப்பில்லாமல் பெற்றோர்களில் தங்கியுள்ள வளர்ப்புப் பிள்ளைகளையும், ஸ்பொன்சர் செய்வதற்கு விடப்படும்.

வயது வந்த, பெற்றோரில் தங்கியிராத பிள்ளைகள் பெற்றோருடன் கூட வருவது இயலாது. ஆனால் அவர்கள் உதவிபெறும் இனத்தவர் என்ற வகுப்பின் கீழ் கனடாவிற்கு வருவதற்குத் தகுதியுடையவர்கள்.

இம்மாற்றங்களோடு, குடும்ப குடிவரவு 1990 இலுள்ள 72500 இலிருந்து 1992இல் 100,000 ஆக இயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1995மட்டில் இவ்வகை 85,000 ஆக நிலையாகும் என எதிர்பார்க்கலாம். இதுவுமே அண்மைக்கால அளவிலிருந்து கணிசமான உயர்வாகும்.

"கனடாவினுள் ஏற்கப்படும் அகதிக் கோரிக்கையாளர்களோடு, அரசாலும்



குடிவரவுத்துறை அமைச்சர்
பாபரா மக்டுகல்

தனியார்களினாலும் ஸ்பொன்சர் செய்யப்படும் அகதிகளுக்கும் வசதி செய்வதன் மூலம் கனடாவில் சிறந்த மனிதாபிமான வரலாற்றை நாம் தொடர்வோம்" எனக் கூறினார் அமைச்சர் மக்டுகல்.

இத்திட்டத்தில் தனித்துவ வகுப்பு சம்பந்தமாகவும் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன.

**தொகுப்பு: எஸ்.சிற்றம்பலம்**

சமஷ்டி அரசு, தேசிய மாகாண பொருளாதார தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் திறமை படைத்த தொழிலாளர்களையும் தேர்ந்தெடுப்பதை நிச்சயபடுத்தவுள்ளது.

இம்மாற்றங்கள், ஐந்து வருட காலத்தில் தனித்துவ வகுப்பினுள் திறமை படைத்த தொழிலாளிகளின் விகிதாசாரத்தை அதிகரிப்பதை ஏதுவாக்கும்.

இத்திட்டம் குடிவரவுச் செயல்முறையில் எண்ணிக்கை சார்ந்த ஒரு குறுகிய கண்ணோட்டத்தை மிஞ்சியே செல்கிறது.

"கொள்கைகள் சட்ட திட்டங்கள் எல்லாவற்றிலும் பின்னணியில் கனவுகள் கண்டு கொண்டும், நம்பிக்கை வசத்தோடுமுள்ள உண்மையான மக்கள் உள்ளனர் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இவர்களுக்கு நாம் கணிப்புத் தகவல்களைக் கொண்டு பதிலளிக்க முடியாது" என்கிறார் மக்டுகல்.

இக்குடிவரவுத் திட்டத்தின் ஓர் பகுதியாக கனடாவுக்கு புதிதாக வருவோர் ஒரு புதிய நாட்டில் வாழ்க்கையின் உண்மை நிலையை எதிர் கொள்வதற்கு உதவுவதை நிச்சயப்படுத்த, சமஷ்டி அரசின் ஒன்றிணைப்புச் சாதுர்யம் உள்ளது.
"அரசு என்ற வகையில், கனடிய சமூகத்தினுள் மக்கள் விரைவாகவும் வசதியாகவும் ஒன்றிணைவதற்கான கொள்கைகளும் செயல் திட்டங்களும் உள்ளன என்பதை நிச்சயிப்பது எங்கள் பொறுப்பாகும்" என்று அமைச்சர் கூறினார்.

இத் தந்திரோபாயத்தின் ஒரு முக்கிய பகுதி மொழிப் பயிற்சியை விரிவாக்குவதாகும். இது அடுத்த வரும் நான்கு வருடங்களுக்கு சமஷ்டி அரசின் மொழிப் பயிற்சி செயல் திட்டத்திற்கான நிதியுதவியை பெருமளவு அதிகரிக்கும் - ஏறத்தாழ 200 டாலர் மில்லியனாகும்.

குடிவரவாளர், கனடிய பண்புகளை அறிவதற்கும், கனடியர், புதிதாக வருபவர்களின் வேறுபட்ட பின்னணிகளை விளங்கவும் உதவுவதில் ஓர் புதிய முக்கியத்துவம் காட்டப்படும்.

இதன் விளைவாக, அரசினால் ஸ்பொன்சர் செய்யப்படும் அகதிகளுக்கு நேரடி உதவியும் நிலைப்படுத்தலும் செய்ய கனடிய குடும்பங்களை சேர்க்கின்ற வரவேற்புத் திட்டம் ஒவ்வொரு வருடமும் 1 மில்லியன் பெறவுள்ளது.

இது கனடியர்கள் குடிவரவு நிலைப்படுத்தல் முறையில் நேரடிப் பங்கு கொள்வதை ஏதுவாக்கும்.

இவ் ஐந்து வருடத் திட்டம், கனடாவினுள் அகதிகளின் பெருக்கத்தை திறமையாகக் கையாளவேண்டிய தேவையையும் ஆராய்கின்றது.

உத்தியோகத்தர் பயிற்சி, வெவ்வேறு பகுதிகளுக்கிடையே இணைத்தியங்கல், அமுல்படுத்தல், துப்பறிதல் ஆகிய பகுதிகளில் அண்மையில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

"கனடாவுக்கு வருவதற்கு விரும்பும் பலவித மக்களின் தேவைகளுக்கு செவிசாய்ப்பதும், திறம்பட செயற்படுகின்றதுமான ஒரு குடிவரவு முறையை கனடா வைத்திருப்பதில் நான் தனிப்பட்ட அக்கறையுடையேன்" என அமைச்சர் மக்டுகல் கூறுகிறார்.

இவ் ஐந்து வருடத் திட்டம் பாரம்பரியமாகவுள்ள ஒரு வருடத் திட்டத்திலிருந்து வேறுபட்டதாகும்.

விரிவான சமூக பொருளாதார கொள்கை அடிப்படையில் குடிவரவு மேலும் முக்கியத்துவம் அடைந்து கொண்டிருப்பதனால், ஒரு நீண்ட கால, சகல அம்சங்களையும் அடக்கியுள்ள திட்டம் தேவைப்படுகின்றது என விளக்கினார் அமைச்சர்.

"இத்திட்டம் நல்லது. நாங்கள் சில கடினமான முடிவுகள் எடுக்க வேண்டியிருந்தது. ஆனால் கனடாவும் அகதிகளும் வரும் காலத்தில் தொடர்ந்து வளர்ச்சியடைந்து சிறப்புற்றிருப்பார் என நினைக்கிறேன்" என்று கூறினார் மக்டுகல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க குடிவரவு நிலையத்தில் தொழில் ஆரம்ப பயிற்சி வகுப்புகள்



கனடாவுக்குப் புதிதாக வந்து, தொழில் இல்லாதிருப்பவர்களுக்கு தொழில் ஆரம்ப பயிற்சி வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் (Job Start Program) ஸ்காபுரோ கத்தோலிக்க குடிவரவு நிலையத்தில் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு குழுவுக்கும் ஏழு வார காலத்துக்கு இந்தப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. ஏப்ரல் மாதம் 8ம் திகதி நான்காவது குழுவுக்கான பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகின்றன. மேற்படி தொழில் ஆரம்ப பயிற்சியை முடித்துக் கொண்ட ஒரு தொகுதியினர் தங்கள் போதனாசிரியர்கள் றென் வெப், ஜோ பிஸனற் ஆகியோருடன் கூட்டாக எடுத்துக் கொண்ட படம் இங்கு பிரசுரமாகின்றது. இப்பயிற்சி வகுப்பில் பங்குபற்ற விரும்புபவர்கள் 757-7010 அல்லது 757-5240 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு விபரங்களைப் பெறலாம். மேற்படி வகுப்புகளில் பங்குபற்றுபவர்களில் ஐம்பது வீதமானவர்கள் தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# கனடாவில் ஒரு தமிழிசை விருந்து



தமிழர்கள் கடல்கடந்து கனடாவுக்கு வந்து புதிய வாழ்க்கையைப் பல நெருக்கடிகளுக்கு மத்தியில் ஆரம்பித்திருக்கின்ற வேளையிலும், தங்களின் பாரம்பரிய கலை, கலாசாரங்களை மறவாது தங்கள் பிள்ளைகளுக்கு அவைகளைப் போதித்து வருவது மகிழ்ச்சிக்குரியதுடன், பாராட்டப்பட வேண்டியதுமாகும். பாவாடை, தாவணி அணிந்து, தலைவாரி மாலை சூடி, தமிழ் மணம் கமழ சிறுமிகளும் யுவதிகளும் மேடையிலமர்ந்து இசை நிகழ்ச்சி அளிக்கும் இந்தக் காட்சி, கனடா பாரதி கலா மன்ற அண்மைய நிகழ்ச்சி ஒன்றின் போது எடுக்கப்பட்டதாகும். இவ்வாறான இசை நிகழ்ச்சிகள் கனடாவின் பல பகுதிகளிலும் இப்போது வார இறுதி நாட்களில் அடிக்கடி நடைபெறுவது கவனிக்கப்பட்டுவருகின்றது.

# இலங்கைப் பட்டதாரிகள் ஒன்றுகூடல்

கனடாவில் இயங்கிவரும் இலங்கை பட்டதாரிகள் சங்கத்தின் வருடாந்த விழாவான ஒன்றுகூடல் நிகழ்ச்சி மார்ச் மாதம் 16ம் திகதி சனிக்கிழமை ஸ்காபுரோவில் நடைபெற்றது. இலங்கைப் பல்கலைக்கழகங்களில் படித்துப் பட்டம் பெற்ற பட்டதாரிகள் இதில் பங்குபற்றினர்.

மேற்படி பட்டதாரிகள் சங்கம் 1989ம் ஆண்டு ஐப்பசி மாதம் ஆரம்பிக்கப்பெற்றது. கனடிய அரசாங்கத்தில் ஒரு Charitable Organization ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. இலங்கைப் பல்கலைக் கழகங்களுக்கு பாடப் புத்தகங்கள், பரிசோதனைக் கூட உபகரணங்கள் பெற்றுக் கொடுத்தல், இலங்கைப் பட்டதாரிகள் தரத்தை கனடிய நிறுவனங்களுக்கு எடுத்துக் கூறுதல், கனடாவுக்குப் புதிதாக வரும் இலங்கைப் பட்டதாரிகளுக்கு ஆலோசனை வழிகாட்டல் என்பன சங்கத்தின் அடிப்படை நோக்கங்களாகும். எதிர்காலம் பற்றிய குழம்பிய நிலையிலிருக்கும் எமது சமுதாயத்திற்கு எந்த வகையில் ஆக்கபூர்வமாக உதவலாம் என்பது பற்றியும் சங்கம் ஆலோசித்து வருகின்றது.



(சங்கச் செயலாளர் ஞானநாயகனும், தலைவர் பிரதீபனும் உரையாற்றும் படங்கள் செய்திக்கு நடுவில்)

சங்கத்தின் தலைவராக ந. பிரதீபனும், செயலாளராக சி.ஞானநாயகனும், பொருளாளராக மு.பாஸ்கரனும் பணிபுரிகின்றனர். பல மூத்த பட்டதாரிகளும், பெண்பட்டதாரிகளும் ஒன்றுகூடலில் கலந்து கொண்டு சிறப்பித்தது குறிப்பிடத்தக்கது.

மாலைநேரத் தேநீர் விருந்துடன் ஆரம்பமான நிகழ்ச்சி, இரவு உணவு விருந்துடன் முடிவடைந்தது. சங்கம் தொடர்பான விபரங்களை பின்வரும் இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெறலாம். பிரதீபன் (724-0654), சிவா (438-4581) ஜுட் தேவகுமாரன் (940-1657)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா பிரஜையாவதற்குரிய அடிப்படையான தகுதிகள் என்ன? எவ்வாறு கனடா பிரஜையாகலாம்?

## HOW TO BECOME A CANADIAN CITIZEN?

கனடிய பிரஜை யார் என்பதற்கு இலக்கணம் செய்து, கனடாவின் பிரஜை ஆவதற்குப் பின்பற்ற வேண்டிய நடைமுறையையும் வகுத்து, கனடிய பிராஜா உரிமை கோர முடியாதவாறு தடைகள் சிலவற்றையும் விதித்து, கனடா பிரஜாவுரிமை பெற்ற ஒருவர் என்ன சந்தர்ப்ப காரணங்களினுல் தனது பிரஜா உரிமையை இழக்க நேரிடும் என்றும் எந்த நிலையில் இழந்த பிரஜாவுரிமையை மீளப் பெறலாமென்றும் கனடா பிரஜாவுரிமைச் சட்டம் (Citizenship Act) விளக்குகின்றது.

பிறநாடுகளின் சட்டங்களில் இல்லாதவாறு கனடா பிரஜாவுரிமைச் சட்டத்தில் அமைந்துள்ள முக்கிய தனிச் சிறப்பு ஒன்று என்னவென்ருல் சட்டம் விதித்துள்ள இலக்கண தேவைப்பாடுகள் நிபந்தனைகள் யாவற்றையும் பூரணமாக நிறைவேற்றிக் கோரப்படும் பிரஜா உரிமை விண்ணப்பம் ஒன்றை நிராகரிக்கும் அதிகாரம் அரசாங்கத்தின் அமைச்சருக்கு இல்லை. அதாவது தகுதி பெற்ற ஒருவருக்கு பிரஜாவுரிமை வழங்குவது அவரது உரிமையைக் (Right) கொடுப்பதாகக் கணிக்கப்படுகிறது: சலுகையாகவல்ல (Privilege)

சட்ட விதிப்படி பிரஜா அந்தஸ்துச் சத்தியப் பிரமாணம் செய்து கனேடியப் பிரஜையான ஒருவர் அந்தத் தருணத்திலிருந்து ஏனைய கனேடியப் பிரஜைகள் அனுபவிக்கும் உரிமைகள் சலுகைகள் யாவற்றுக்கும் உரித்துடையவர் ஆகிருர் என்பதுமன்றி அவர்களைப் போலவே கடமைப் பொறுப்புகட்கும் கட்டுப்பட்டவராகிருர்.

பிரஜா உரிமை கோருகிறவர் பதினெட்டு வயது நிரம்பியவராக அல்லது அதற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும். இப்படிப்பட்டவர் உரிய விண்ணப்பப் படிவங்களை நிரப்பி கேட்கப்பட்டுள்ள பத்திரங்களையும், புகைப்படங்களையும் அவற்றுடன் இணைத்துக் கனடா பிரஜாவுரிமை நீதிஸ்தலம் (Citizenship Courts) ஒன்றில் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பக் கட்டணம் ஒன்றும் செலுத்த வேண்டும். இதுதான் ஆரம்ப நடவடிக்கை. இந்த ஆரம்ப நடவடிக்கையை நிறைவேற்றுவதற்குச் சாதாரணமாக நீதிஸ்தலத்து பிரஜாவுரிமை அதிகாரி (Citizenship officer) ஒருவரின் உதவியை நாடலாம்.

விண்ணப்பதாரருக்கு கனடாவில் வசிப்பதற்கு வழங்கப்பட்ட நிரந்தரவாசி என்ற அந்தஸ்தை இழக்காமல் இருந்தால் தான் பிரஜா உரிமைக் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படும். கனடாவின் சட்டங்களை மீறி சிறைத்தண்டனை அனுபவிப்பவர் அல்லது பிணையில் வெளிவந்து நிற்பவர் அல்லது தடை நிபந்தனைக் கட்டளைக்கு (Parote) உள்ளானவர் அல்லது கனடா சமஷ்டி அரசுச் சட்டத்தின் கீழ் பாரிய குற்றம் (charged with an indictatte offence under a federeal status) ஒன்றுக்குக் குற்றம் சாட்டப்பட்டுள்ளவர், அல்லது பிரஜா உரிமைச் சட்டத்தின் கீழ் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளவர், இப்படியானவர்கள் பிரஜாவுரிமை பெறமுடியாது என்று பிரஜாவுரிமைச் சட்டத்தின் 22வது பிரிவில் விதிக்கப்பட்டுள்ளது. மேலும், விண்ணப்ப நாளிலிருந்து மூன்ருவது ஆண்டு கால எல்லைக்குள்ளாயினும் சரி, அல்லது பின் பிரஜா அந்தஸ்துச் சத்தியப் பிரமாணம் செய்வதற்கு நியமிக்கும் திகதிக் கால எல்லைக்குள்ளாயினும் சரி, மேற்படி குற்றங்களில் ஒன்றுக்குக் குற்றவாளி என்று தீர்க்கப்பட்டவர்களும் பிரஜாவுரிமை பெறுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளனர்.

**ஜெகன் என். மோகன் LL.B.**
**பாரிஸ்டர் & சொலிஸிட்டர்**

விண்ணப்பதாரர் கனடாவில் நிரந்தரவாசியாக வசித்த காலக் கணக்கும் எடுக்கப்படும். விண்ணப்பத் திகதிக்கு முந்திய நான்கு ஆண்டு காலத்தில் கூட்டுமொத்தமாக மூன்று ஆண்டுகளாவது நீங்கள் கனடாவில் வாசம் செய்து இருக்கிறீரா என்று பிரஜாவுரிமை நீதிபதி தீர்மானிப்பார். நிரந்தரவாசி ஆவதற்கு முன்பும் நீங்கள் கனடாவில் வசித்திருந்தால், அந்தக் கால அளவில் அரைவாசி கணக்கிற்கு எடுக்கப்படும்.

அடுத்தது மொழித் தகுதி. கனடாவின் உத்தியோக மொழிகளாகிய பிரஞ்சு, ஆங்கிலம், ஆகிய இரண்டில் ஒன்றிலாவது உங்களுக்குத் தேர்ச்சி இருக்க வேண்டும் என்று பிரஜாவுரிமைச் சட்டம் விதித்துள்ளது. தேர்ச்சி என்ருல், கனேடிய சமுதாயத்தில் சாதாரணமாகப் புளங்குவதற்குத் தேவையான (Certain Degree of Adaptation) அளவுக்கு மொழித்திறமை இருக்க வேண்டும் என்று விதிகள் கூறுகின்றன. இதன் நோக்கம் என்னவென்ருல், கனேடியச் சமுதாயத்தோடு ஒன்றி ஓரளவுக்குச் சுயமாக நீர் இயங்க வேண்டும் (Minimum Level of Autonomy) என்பதே.

கனடாவைப் பற்றியும், கனேடியப் பிரஜைக்கு உள்ள கடமைப் பொறுப்புக்கள் உரிமைகள் (Responsibilities and priveleges) பற்றியும் உங்களுக்கு எவ்வளவு அறிவு இருக்கிறது என்று அறிவதற்காக சில கேள்விகளைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுமாறு பிரஜாவுரிமை நீதிபதி சட்டத்தினுல் பணிக்கப்பட்டுள்ளார். இந்தக் கேள்விகள் கனடாவின் மேலெழுந்த வாரியான சரித்திரம், பூமிசாஸ்திரம், ஜனநாயக ஆட்சி முறை சம்பந்தப்பட்டவையாக இருக்கும். ஆரம்ப நடவடிக்கை பூர்த்தி செய்யப்படும் பொழுது உங்களுக்குத் தரப்படும் கைநூலில் அடங்கிய விபரங்களின் அடிப்படையில் கேள்விகள் அமையும்.

சில சமயம் ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு மொழித் தேர்ச்சி இருந்த போதிலும் கனடா பிரஜா நிலை சம்பந்தமான கேள்விகட்கு விடை சொல்லக் கூடிய அளவிற்கு அந்த மொழியில் தேர்ச்சி இல்லாமல் இருக்கலாம். இப்படியான சந்தர்ப்பத்தில் நீங்கள் விரும்பும் மொழியில் உங்கள் நேர்முகப் பரிசீலனையை நடத்த அனுமதிக்கவும்படலாம். அதுவுமன்றி மொழித் தேர்ச்சி, கனடா பற்றிய அறிவு ஆகியவற்றை சீவகாருண்ணிய காரணத்துக்காக (Compassionate grounds) தவிர்க்கவும் அமைச்சருக்கு அதிகாரம் உண்டு.

மேலே சொல்லப்பட்டவை எல்லாம் திருப்திகரமாக இருந்தால் நீதிபதி உங்கள் விண்ணப்பத்தை ஏற்றுக் கொள்வார். ஏற்றுக் கொண்டால் அடுத்த நடவடிக்கையானது பிரஜாவுரிமை அந்தஸ்துக்கு சத்தியப் பிரமாணம் (Oath of Citizenship) செய்து கனேடிய பிரஜை ஆவதே.

விண்ணப்பதாரர் பதினெட்டு வயது நிரம்பாதவராக இருந்தால் இவர் பிரஜாவுரிமை கோருவதற்கு பெற்ருேர் இருவரில் ஒருவராவது கனேடியப் பிரஜை ஆகவும் இவர் நிரந்தர வாசி அந்தஸ்து உள்ளவராகவும் இருக்க வேண்டும். பெற்ருேரில் ஒருவர் பிரஜாவுரிமை கோரும் சமயத்தில் இவரும் தனது விண்ணப்பத்தைச் சமர்பிக்கலாம்.

கனடியப் பிரஜாவுரிமையை எப்படிப் பெறுவது என்பது குறித்து இதுவரை அவதானித்தோம். உண்மையை மறைத்துக் கள்ளத்தனமாக பெறப்பட்ட பிரஜாவுரிமைக் காரர்களைத் தேடிக் கண்டு பிடித்து இரத்துச் செய்யும் நடவடிக்கைகளில் கனடாவின் மத்திய அரசு தீவிரமாகச் செயற்பட்டு வருகிறது. ஆகவே சட்டத்தினின்று வழுவாமல் நேர்மையாக பிரஜாவுரிமை பெற்றவர்கள் தாம் பெற்ற உரிமையைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது. பெற்ற உரிமையைப் பாதுகாத்துக் கொள்ள எப்படி நடந்து கொள்ள வேண்டும், என்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பன போன்ற கேள்விகட்கு அடுத்து வரும் தமிழர் தகவல் இதழ்களில் விளக்கம் தரப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுதொழில் முயற்சியை எப்படி ஆரம்பிக்கலாம்?

# "தவறுகளுக்காக



சிறு தொழில் முயற்சியை எப்படி ஆரம்பிக்கலாம்? அதனை எவ்வாறு திறம்பட நிர்வகிக்கலாம்? அதற்கான முக்கிய ஆரம்ப மூலதனம் என்ன? இவற்றிற்கெல்லாம் நிதி நிபுணர்களின் ஏகோபித்த பதில் என்ன தெரியுமா?
- தன்னம்பிக்கை

இலங்கைச் சிறுபான்மையினர் நலன் பேண் மன்றம் (சேக்கம்) மார்ச் மாதம் 16ம் திகதி மாலை ரொறன்ரோ ஓரியோல் சன சமூக நிலையத்தில் நடாத்திய "சிறு தொழில் முயற்சியை ஆரம்பித்து நிர்வகித்தல்" என்ற கருத்தரங்கில் இதனை நன்கு அவதானிக்கக் கூடியதாக இருந்தது.



ஆவல்களையும் அபிலாசைகளையும் நெஞ்சில் சுமந்தவர்களாய் பார்வையாளர்கள் பலரை இக் கருத்தரங்கில் காண முடிந்தது.

அனுபவங்களையும் ஆற்றல்களையும் தெட்டத் தெளிவாக வெளிக்காட்ட வல்லவர்களாக இக் கருத்தரங்கில் உரையாற்றியோரைத் தரிசிக்க முடிந்தது.

சுய தொழில் செய்வோர் ஊதியத்துக்காக உத்தியோகம் செய்வோரிலும் பார்க்க 50% அதிகமாக ஊதியம் பெறுகின்றனர். 50% சிறு தொழில் முயற்சிகள் ஒரு சதமேனும் கடனுகப் பெருமல் ஆரம்பிக்கப்படுகின்றன. 50% ஆன சிறு தொழில் ஸ்தாபனங்கள் தமது இல்லங்களில் இருந்தே நடத்தப்படுகின்றன. அத்துடன் ஊதியத்துக்குத் தொழில் செய்வோரில் 42% ஆனேர் தமது தொழில்களில் இருந்து கொண்டே பகுதி நேரமாக சிறு தொழில் முயற்சியில் ஈடுபட்டு பின்னர் உரிய காலம் வரும் பொழுது தமது உத்தியோகத்திலிருந்து முற்றுகவே விலகுகின்றனர். சிறு தொழில் முயற்சியின் கடந்த கால அறிக்கை இவற்றையே காட்டுகின்றது.

திரு. பாலசிங்கமும், திருமதி. இராசநாயகமும் மங்கல விளக்கேற்றிவைக்க திரு.யோகி தம்பிராஜாவின் வரவேற்புரையுடன் கருத்தரங்கு ஆரம்பமானது.

கருத்தரங்கிற்குத் தலைமை தாங்கிய புகழ் பெற்ற வங்கியாளர் திரு. அகஸ்ரின் ஜெயநாதன் கருத்தரங்கின் நோக்கம் பற்றியும் தொழில் முயற்சிக்கு ஆதாரம் அளிக்கும் சேவைகள் பற்றியும் விபரமாகவும் விளக்கமாகவும் எடுத்துக் கூறினர்.

அவரது உரையின் ஒரு பகுதி இதோ:-
"ஒரு தொழிலைச் செய்வது எனத் திட்டமாகத் தீர்மானம் எடுத்தபின் தேர்ந்தெடுக்கப்பட்ட அத் தொழிலுக்கான அறிவை விருத்தி செய்தலும், தேவைப்படும் பொழுது வெளி உதவி, ஆதாரம் என்பவற்றைப் பயன்படுத்தலும், திட்டங்களை நன்கு செயற்படுத்துவதும், அத்தொழிலின் வெற்றிக்கான அங்கங்களாக அமையும். தவிர ஒரு தொழிலுக்கென நிச்சயிக்கப்பட்ட மூலதனத்தையோ, அல்லது பெறப்பட்ட பண உதவியையோ வேறு கருமங்களுக்காகத் திசை திருப்புவது கட்டாயமாகத் தவிர்க்கப்பட வேண்டும். தொழில் முயற்சிக்கு ஆதாரம் அளிக்கும் சேவைகளில் வங்கிக் கடன் பெறுவதும், தகுந்த நிபுணர்களின் ஆலோசனைகளை நாடுவதும், சந்தை மாற்றத்தினை உரிய நேரத்தில் அவதானிக்கும் திறமையும் நிர்வாகத்திலும் நிர்வகித்தலிலும் காட்டும் கரிசனையும் முக்கியமானவையாகும்.

இது தொடர்பாக தொடர்ந்து பேசிய திரு. வலன்ரைன் பாலசிங்கம் பின்வருமாறு தெரிவித்தார்:-
"வங்கிகளில் கடன்களை இலகுவாகப் பெற்றுக் கொடுப்பதற்கென, பல நிறுவனங்கள் கனடாவில் இயங்குகின்றன. எமது தொழிற் திட்டங்களை அவர்களுக்குத் தெரிவித்தால் தேவையான பத்திரங்களை ஒழுங்குமுறையில் வங்கி அதிகாரிகளின் எதிர்பார்ப்புகளுக்கும் விருப்புகளுக்கும் ஏற்ற வகையில் தயாரித்து உதவுவார்கள். அத்துடன் வங்கி அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ள வேண்டிய முறைகள் பற்றியும், வங்கி அதிகாரிகளால் கேட்கப்படக் கூடிய கேள்விகளையும் விடைகளையும் தருவார்கள். இத்தகைய நிறுவனங்கள் ஊடாக 80% கடன் கிடைக்கும்.

நேரடியாக விண்ணப்பித்தால் 50
சமயம் பெறமுடிவதுடன் விண்ணப்
நிராகரிக்கப்பட்டால் மீண்டும் ஒ
துக்கு விண்ணப்பிக்க முடியாத த
கூடும். இச் சேவைக்கென நிறுவன
பணத்தின் பெறுமதியிலும் பார்க்க
பலனின் பெறுமதி அதிகமாகும் என்

"தவறுகளுக்காக எவருமே திட்டமி
திட்டமிடத்தான் தவறி விடுகின்றார்
- பிரபல வரி நிபுணர் திரு.யோகி
வரித் திட்டமிடுதலின் முக்கியத்துவ
உரையை இவ்விதம் ஆரம்ப
தொடர்கையில் பின்வருமாறு கூறி
யாவும் எண்ணத்தில் மட்டும் இருந
அவை எழுத்துக்களில் பதியப்பட
தொழில் மூலதனமாக முக்காற்ப

கருத்தரங்குத் தொ
இளவாலை
எஸ். ஜெகதீசன்

யும் காற்பங்கு கடனும் இருக்கலா
10% நிதியுடன் 90% கடனைப் பெ
ஆரம்பிப்பது நல்ல அறிகுறியாக
தனமிடுவோரின் சுயபங்களிப்பும்
றிக்கு அனுசரணையாக அமையும்.
நிலையைப் பொறுத்தே எந்தச் சுய
ருத்தி அடையும். பங்குதாரராகவோ
டாகவோ ஒரு நிறுவனத்தை ஆர
தலிலும் பார்க்க அனேக நன்மை
முயற்சி ஈட்டிக் கொடுக்கும். தனி
நயமடைந்தால், அவருக்கான வ
மனைவி மக்களுடன் பகிர்ந்து செ
அதேபோல நட்டமடைய நேரிடி
ருந்து வரிக் கழிவு செய்வதற்கும்
கார் பாவனை, விருந்தோம்பல் போ
வுகளையும் தனி நபர் வரிக் கழிவு
முடியும். பின்னர் ஒரு நிலையில் த
முயற்சி நன்கு வளர்வடையுமெனி
கூட்டுஸ்தாபனமாகவோ நிறுவன
செய்யலாம். எவருமே 50 செ
வியாபார நிலையத்தைப் பதிவு செய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க்காக திட்டமிடுவதில்லை; திட்டமிடவே தவறுகின்றோம்"



ணப்பித்தால் 50% மட்டுமே சில
நுடன் விண்ணப்பம் ஒரு தடவை
ல் மீண்டும் ஒரு வருட காலத்
க முடியாத தடையும் ஏற்படக்
க்கென நிறுவனங்கள் அறவிடும்
யிலும் பார்க்க பாவனையாளரின்
அதிகமாகும் என்றார்.

பருமே திட்டமிடுவதில்லை. ஆனால்
வறி விடுகின்றார்கள்."
ளர் திரு.யோகி தம்பிராஜா நிதி
ன் முக்கியத்துவம் பற்றிய தனது
தம் ஆரம்பித்து மேலும்
வருமாறு கூறினார்: "திட்டங்கள்
் மட்டும் இருந்தால் போதாது.
ில் பதியப்பட வேண்டும். சுய
ாக முக்காற்பங்கு சேமிப்பு நிதி

தரங்குத் தொகுப்பு
இளவாலை
ஸ். ஜெகதீசன்

னும் இருக்கலாம் ஆனால் மாறாக
% கடனைப் பெற்றுத் தொழிலை
அறிகுறியாக அமையாது. மூல
பபங்களிப்பும் தொழிலின் வெற்
ாக அமையும். காசோட்டத்தின்
தே எந்தச் சுய தொழிலும் அபிவி
பங்குதாரராகவோ அல்லது கூட்
வனத்தை ஆரம்பித்து நிர்வகித்
அனேக நன்மைகளை தனி நபர்
டுக்கும். தனி நபர் உழைப்பில்
வருக்கான வரிச் சலுகைகளை
பகிர்ந்து கொள்ள முடியும்.
டைய நேரிடினும் ஊதியத்திலி
செய்வதற்கும் இடமுண்டு. தவிர
ந்தோம்பல் போன்ற இதர செல
வரிக் கழிவு மூலம் அனுபவிக்க
ஒரு நிலையில் தனி நபரது தொழில்
ர்வடையுமெனின் அதனை அவர்
வோ நிறுவனமா கவோ பதிவு
ருமே 50 டொலருடன் ஒரு
தைப் பதிவு செய்ய முடியும்.


கணக்காய்வாளர் திரு. எஸ்.செல்வரட்ணம் தொழில் முயற்சியை திட்டமிடல் பற்றி உரையாற்றும் பொழுது:- சிறு தொழில் முயற்சிக்கு அடிப்படை மூலதனமாக அமைவது, அதனை ஆரம்பித்து நடத்த உத்தேசிக்கும் நபர்தான். அவரது தன்னம்பிக்கை, விடாமுயற்சி, மனம் சோராமை, தலைமை தாங்கும் தன்மை, இணக்கமுள்ள உறவு, குடும்ப ஒத்துழைப்பு என்பனவற்றில் சிறு தொழிலின் வெற்றி பெரிதும் தங்கியிருக்கும். பிரச்சினைகளையும், முரண்பாடுகளையும் முன்கூட்டியே முறியடிப்பதில் புதிய சந்தர்ப்பங்களைத் துரிதமாகப் பயன்படுத்துவதில் காட்டும் அக்கறையும் சரியான திட்டப்படி வழிநடத்தலும் வெற்றியின் வேகத்தை அதிகரிக்கும். சிறு தொழில் முயற்சிக்குத் திட்டமிடும் எவருமே, மாற்றங்களை எதிர்நோக்க வேண்டும். எதிர்காலம் பற்றி நன்கு கணிக்க வேண்டும். தொழிலை விஸ்தரிக்கும் சந்தர்ப்பம் ஏற்படின் பயன்படுத்தி மூலதனப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய வேண்டும். பொருத்தமான இடத்தை தெரிவு செய்தல் வேண்டும். இவை செயற்படுத்தப்பட்டால், அத்தொழிலின் உயர்ச்சியும் வெற்றியும், தடுக்கவும் தவிர்க்கவும் முடியாமல் போய்விடும்.

"உரிமை" முயற்சியில் ஈடுபடல் பற்றி கணக்காளர் திரு. எஸ் பாலசத்திரன் கருத்துத் தெரிவித்தார்.
இன்னுமொருவரின் உரிமையை தாம் பெற்று சிறுதொழில் முயற்சியை ஆரம்பித்து நடாத்தச் சில விதிமுறைகள் உண்டு. திறமை, குறிக்கோள், ஆர்வம் ஆகியனவற்றை ஆதாரமாகக் கொண்டு உரிமையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பணநிலை மூலதன ஆதரவு, குடும்ப உதவி என்பனவற்றை அனுசரணையாகக் கொண்டு அண்மித்த பொருத்தமான இடத்தில் நிலையத்தை நிறுவுவது அல்லது நிறுவனத்தை நிலை பெறச் செய்வது உகந்தது. உரிமையாளருடன் நேரடித் தொடர்பு ஏற்படுத்துவதன் மூலமும் சில சலுகைகள் ஏற்படுத்திக் கொள்ள முடியும். உடமையின் பெயர், வர்த்தக அடையாளம், போன்ற பலவற்றை சட்ட மூலம் புதியவர் பெற முடியும். ஒப்பந்தங்களுக்கு முரணாக நடக்க முற்பட்டால் உரிமையை இழக்கக் கூடும்.

சிறுமுயற்சியில் சட்ட நெறி ஆய்வுகள் பற்றி சட்டத்தரணி திரு.எஸ்.ஸ்ரீதரனும், தொழில் முயற்சிகளுக்குப் பண உதவிகள் என்ற தலைப்பில் முயற்சி ஆரம்பிக்கக் கடன் பற்றி திரு.ஈலவறெற்றவும் வங்கி எதிர்பார்ப்பவை பற்றி திரு.மைக்கல் கெரளுஸ்ம் விளக்கமளித்தனர்.

என்னிடம் பணம் இல்லை, என்னிடம் பட்டப் படிப்பு இல்லை, என்னிடம் தொழில் அனுபவம் இல்லை, எந்த வகையான சிறுமுயற்சியில் ஈடுபடலாம் என எனக்குத் தெரியவில்லை, எனது நிரந்தர உத்தியோகத்தில் பல வருடங்கள் பணிபுரிந்து விட்டேன், என்னால் வியாபாரம் செய்ய முடிவதில்லை. என்னால் மற்றவர்களுடன் சரளமாகப் பேசமுடிவதில்லை, எனக்குப் பயம்......

-இப்படியான காரணங்களில் ஏதாவது ஒன்று சிறு தொழில் முயற்சி ஆரம்பித்து நிர்வகிக்க விருப்பமிருந்தும் தடையாக நெஞ்சைக் குடைகின்றதா?




-அல்லது ஆயிரம் ஆயிரம் திட்டங்களை உருவாக்கி விட்டு அவற்றை இதயச் சுரங்கத்தில் இறுக்கமாகப் பூட்டி விட்டு, கற்பனைக் கடலில் மிதந்து, கனவுலகத்தில் சஞ்சாரம் செய்கின்றீர்களா??

- எப்படியெனினும்,
உங்கள் கனவுகளை நினைவுகளாக்க, கற்பனைகளை நிஜங்களாக்க சிறு தொழில் செய்து பெரு முதலீட்ட
-இப்படியான கருத்தரங்குகள் உங்களுக்குரிய முறையில் வழியைக் காட்டி, உயரிய முறையில் வாழ்வை அமைத்துத் தரும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை!

- ஆக்கமும் ஊக்கமும் தரும் "சேக்கத்தின்" நல்ல நோக்கமும் மார்க்கமும் என்றும் தேக்கமடைவதுமில்லை!! மனதில் பதிந்தால் பின்னர் நீக்கமடைவதுமில்லை என்பது உறுதி!!!

(கருத்தரங்கில் பங்குபற்றியோரின் ஒரு பகுதியினரையும், இதில் உரையாற்றியவர்களையும் இங்குள்ள படங்களில் காணலாம்.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தமிழர்கள் மனதில் வைத்திருக்க*
*வேண்டிய பெயர்*
*தமிழர்கள் நினைவில் நிலைத்திருக்க*
*வேண்டிய பெயர்*

# சிவாஸ் ரேடிங் கோ லிமிட்டட்

**உங்கள் தேவை என்ன?**
மரக்கறிகளா?
கடல் உணவுகளா? மீன் வகைகளா?
இலங்கை, இந்திய உணவுப் பண்டங்களா?
தோசை, இடியப்பம், அப்பம்
சுடச்சுட சாப்பிட விருப்பமா?
உங்கள் தேவை எதுவானால் என்ன?
உடன் எங்களை நாடுங்கள்!

## நீங்கள் கேளுங்கள்! நாங்கள் தருகின்றோம்!

திருமணங்களுக்குத் தேவையான
கூறை, பட்டுவேட்டி, சால்வை, தலைப்பாகை,
குத்துவிளக்கு, பூமாலைகள்,
மணவறை, மண்டபவசதி,
விசேஷ உணவு வகைகள் உட்பட
அனைத்துத் தேவைகளையும்
ஒரே இடத்தில் பெற நீங்கள்
உடனடியாகத்
தொடர்பு கொள்ள வேண்டிய இடம்

# SIVA'S
## TRADING CO LTD.

3852 Finch Ave. East,
(Kennedy/Finch) Scarborough
**Tel: 321-2739**





மணவறை, பூமாலை,
சடைநாகம், தலைநகை,
தலைப்பாகை,
மணப்பெண் அலங்காரம்,
பந்தல் அலங்காரம்,
கல்யாண மண்டபம்,
கல்யாண அழைப்பிதழ்,
கல்யாண
பூசைப்பொருட்கள்,
கல்யாணப் பலகார,
உணவு வகைகள்,
நாதஸ்வரம், தவில்,
படப்பிடிப்பு,
Van Moving ஆகிய அனைத்துச்
சேவைகளையும் ஒரே இடத்தில்
வழங்குகின்றோம்.

திருமணப் பதிவு, திருமணம்,
புதுமனை புகுதல், கடைதிறப்பு வைபவம்,
புண்யாக வாசனம்,
சிரார்த்தம் (திவசம், வீட்டுக் கிரிகை)
பூப்புனித நீராட்டு மங்கள வைபவம்,
அனைத்தையும் வேதாகம விதிமுறைப்படி
நிறைவேற்றுகின்றோம்.

இவற்றுடன் ஜனன பலன், ஜோதிடம், நாள்
பார்த்தல், விவாகப் பொருத்தம்
ஆகியவைகளையும் நாம் கவனிக்கிறோம்.
ஆலய விழாக்களுக்கான சப்ரம்,
பூமாலைகளுக்கும் எம்முடன்
தொடர்பு கொள்ளவும்.

**பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள்**
**(416) 285-0974**

**ஸ்ரீநிவாச சர்வானந்த குருக்கள்**
**(416) 759-7733**

முகவரி
**84 Bertrand Ave. Scarborough,**
**Ontario. M1K 2S6**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடாவில் பல் பராமரிப்பு (Dental care) என்பது சௌக்கிய சேவையில் முக்கியமான ஒன்றாகக் கணிக்கப்படுகிறது. இதற்கென அரசாங்க உதவியும், வசதிகளும் கூட வழங்கப்படுகின்றது. பற்சிகிச்சை, பல் பராமரிப்பு போன்ற சில பொதுவான விடயங்களை பல் வைத்தியர் டாக்டர் அ.சண்முகவடிவேல் இலகுநடையில், கேள்வி-பதில் அமைப்பில் கீழே தருகின்றார். இது இங்கு வாழும் தமிழர்களுக்கு நிச்சயம் உதவிக்கூடும் தொடர்ந்தும் பற்கள் தொடர்பான பிரச்சனைகள், சந்தேகங்களுக்கு டாக்டர் 'சண்' தமிழர் தகவல் மூலம் பதிலளிக்க முன்வந்துள்ளார். எனவே உங்கள் கேள்விகளை எழுத்து மூலம் தமிழர் தகவலுக்கு அனுப்பி வையுங்கள்.

# பற்களை முறையாகப் பராமரிப்பதால் ஆயுட் காலம் வரை பாதுகாக்க முடியும்

**கேள்வி:** *பல்வியாதி இல்லாதபோது கூட எமது பற்களை அல்லது வாய் உறுப்புகளை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டியது அவசியமா?*

**பதில்:** *பற்களில் வியாதி இல்லாதவர்கள் இல்லை என்றே கூறலாம். பல்லில் வியாதி உண்டா இல்லையா என்று தீர்மானிக்க பல் வைத்தியரால் மட்டுமே முடியும். தமக்குப் பல்லில் வியாதிகள் ஒன்றுமே யில்லை என்று பலர் நினைப்பதால்தான், வியாதி முற்றிய நிலையில், அவர்கள் வைத்தியரை நாடவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இதனால் குறைந்த பட்சம் வருடத்திற்கு இரு தடவையாவது நாம் எம்மைப் பல் வைத்திய பரிசோதனைக்கும் சிகிச்சைக்கும் உட்படுத்த வேண்டியது அவசியமாகும்.*

**கேள்வி:** வருடமிருமுறை அல்லது குறைந்த பட்சம் வருடம் ஒரு முறையாதல், பல் வைத்தியரின் ஆலோசனையைப் பெறுவதால் ஏற்படக்கூடிய நன்மைகள் என்ன?

**பதில்:** *1. பற்கள்* (teeth) *முரசு* (gum) *பற்புரை*(periodontium) *மற்றும் ஏனைய பல் உறுப்புகளில் ஏற்படக் கூடிய நோய்களை முளையிலேயே களைய முடிகிறது.*

*2. மேலும் பற்களிலும், ஈறுகளிலும் படியும் காவி* (stain) *கறை* (calculus) *என்பவற்றை பற்தூரிகை* (toothbrush) *மூலம் மாத்திரம் எம்மால் அகற்றிவிட முடியாது. அவற்றை உரிய முறையில் துப்புரவு செய்யப் பல் வைத்தியரால் மட்டுமே முடியும்.*

**கேள்வி:** பற்களை அடிக்கடி துப்புரவு செய்வதால் பற்களுக்குச் சேதம் விளைவிக்கப்படுவது மாத்திரமன்றிப் பற்களுக்கிடையில் இடைவெளி ஏற்படலாம் எனச் சிலர் அஞ்சுகிறார்களே. இது உண்மையா?

**பதில்:** *இது உண்மைக்குப் புறம்பானது. பற்களையும், பல்லீறு, முரசு போன்ற உறுப்புகளையும் பாதுகாக்கும் ஒரு நோக்கத்துக்காகவே பற்கள் சுத்தம் செய்யப்படுகின்றன. பல்சுத்தம் செய்யப்படுவதால் பல் இனாமல்* (enamel) *தேய்வடையவோ, பற்களுக்குச் சேதம் விளையவோ அன்றிப் பற்களுக்கிடையில் இடைவெளி ஏற்படவோ எதுவில்லை. இவ்வாறான கருத்து முற்றிலும் தவறானதாகும்.*

**கேள்வி:** பற்களைப் பல வருடங்களாகப் பல் வைத்திய நிலையத்தில் சுத்தம் செய்யாது இருப்பவர்களின் பற்களுக்கு நாளடைவில் ஏற்படக் கூடிய தீய விளைவுகள் எவை?

*பதில்: முரசு வீக்கமடைந்து முரசிலிருந்து இரத்தம், சிதள்* (pus) *வடிய ஆரம்பிக்கும். வாயிலிருந்து துர்நாற்றம் வீசும், இதன் தொடர்பாக பற்கள் ஈடாடத் தொடங்கி விடும். நாளடைவில் பற்களுக்கிடையில் இடைவெளிகள் ஏற்படுகின்றன. சிலருக்குப் பல் மிதக்க* (protrude) *ஆரம்பிக்கின்றது. ஈற்றில் இளம் வயதிலேயே, இவர் தம் பற்களையும் இழக்க நேரிடுகிறது.*

> பல் வைத்தியர்
> டாக்டர். அ. சண்முகவடிவேல்
> பதிலளிக்கிறார்

**கேள்வி:** "பல்லுப் போனால் சொல்லுப் போச்சு" என்ற கூற்றில் எவ்வளவு அர்த்தம் இருக்கிறது?

**பதில்:** *இதுமுற்றிலும் உண்மையான கூற்று. பற்கள் இல்லாவிடில் சொற்களை உச்சரித்துப் பேசுவது கடினமாகிறது. பல் லிழந்தவர்கட்குத்தான் அதன் அருமை தெரியும். பல் இல்லையேல் நாம் சுவைத்து உணவை உண்ணமுடியாது. முன்வாய் பற்களை இழந்தவர்கள் தமது இலட்சணத்தை இழக்கின்றனர். அதுமட்டுமன்றி ஒரு சபை சந்தியில் வாயைத் திறந்து பேசுவதற்கே அஞ்சுகின்றனர். தாடை மூட்டுகளில்* (Temporo-mandibular joints) *மூட்டு வருத்தங்களும்* (TMjointpain) *ஏற்படுகின்றன. வாயில் எஞ்சியுள்ள பற்கள் தாம் நினைத்தது போல நகர ஆரம்பித்து விடுகின்றன. இன்னும் பல அநர்த்தங்கள் பல்லில்லாவிடின் ஏற்படும் என்பதில் ஐயமில்லை.*

**கேள்வி:** பல் வியாதிகளில் முன்னணியில் நிற்பவை (முக்கியமானவை) எவை?

**பதில்:** *பற்சூத்தை* (Dental caries) *மற்றும் பற்புரை முரசு வியாதிகள்* (periodontal disease) *ஆகியவையே முன்னணியில் நிற்கின்றன. பற்சூத்தை சிறுவர்களில் அதிகமாகவும் பற்புரை வியாதிகள் வயது வந்தவர்களில்* (Adult) *கூடுதலாகவும் காணப்படுகின்றன. பற்புரை முரசு வருத்தங்கள் நம்மவரில் (தமிழர்களில்) அதிகமாக இருப்பதை இங்குள்ள வைத்தியர்கள் (பல் வைத்தியர்கள்) அவதானித்திருக்கிறார்கள்.*

**கேள்வி:** மேற்கூறிய அவதானிப்பிற்கு என்ன காரணம் என்று கூறமுடியுமா?

**பதில்:** *நாம் பற்களைச் சுத்தம் செய்வதில் உள்ள குறைபாடே முக்கிய காரணமாகும். பல் முரசு போன்ற உறுப்புகளின் ஆரோக்கியத்தில் அக்கறைக் குறைவும் மற்றுமொரு காரணமாகும். பல் வைத்தியரின் பார்வை பலருக்கு வருடக்கணக்காகக் கிடைக்கப் பெறுவதில்லை. பல் வைத்திய நிலையத்தில் பல வருடங்களாகவோ அன்றி ஒருசிலர் என்றுமே பற்களைச் சுத்தம் செய்விக்காதிருக்கிறார்கள்.*

**கேள்வி:** ஒருவரின் பல் முரசு ஆகியவை சுக நிலையில் இருப்பதை வைத்து அவரின் விஞ்ஞான அறிவையும் மேம்பாட்டையும் கூறிவிட முடியுமா?

**பதில்:** *ஆம் இந்தக் கருத்தை நான் ஓரளவுக்கு ஏற்றுக் கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன். இவ்வாறான பல் முரசு சுக நிலையில் இருப்பதற்கு அவரது விஞ்ஞான அறிவும்-மேம்பாடும் முக்கிய காரணிகளாகும்.*

**கேள்வி:** அந்தக் காலத்தில் இல்லாத பல் வியாதிகள் எப்படி எங்களுக்கு இப்போது ஏற்படுகின்றன?

**பதில்:** *அந்தக் காலத்தில் பல் வியாதிகள் முற்றாகவே இல்லை என்று கூற முடியாது. ஆனால் குறைவாக இருந்திருக்கலாம். அன்று நம் மூதாதையர் உண்ட உணவிற்கும், இன்று நாம் உண்ணும் உணவிற்கும் (மேற்கத்திய உணவு) உள்ள வேறுபாட்டை நாம் அறிவோம். நாம் உண்ணும் முறை, உண்ணும் நேரம், காலம் என்பவற்றிலும் பாரிய மாற்றங்கள் இருக்கின்றன. அவர்கள் ஆலும் வேலும் பல்லுக்குறுதி எனும் முதுமொழிக்கொப்ப ஆலம் வேரால் பல் துலக்கினார்கள். அவர்களது பல்துலக்கும் முறை வாயைக் கொப்பளிக்கும் முறைகளை நாம் தற்போது கடைப் பிடிக்க முடியாதவாறு இயந்திர வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பல் வைத்தியரைச் சந்திப்பதிலும் சிகிச்சை பெறுவதிலும் அக்கறை கொள்ளாதிருத்தலும் பல் வியாதிகள் பல்கிப் பெருக ஏதுவாக அமைகின்றன.*

*(அடுத்த இதழில் மேலதிக விபரங்கள் வரும்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்**
**தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்**

பண்டிகைகளுக்கான பரிசுப் பொருட்கள்
அலங்காரமான அன்பளிப்புப் பொருட்கள்
அழகுக்கு அழகூட்டும் தங்க ஆபரணங்கள்
அன்றாட உபயோகத்துக்கான எவர்சில்வர்கள்
ரெடிமேட் உடைகள், பட்டாடைகள்
பல்வகை உணவுப் பொருட்கள்
தமிழ் வீடியோ படங்கள், ஒலிப்பதிவு நாடாக்கள்
VIDEO TRANSFER, FAX SERVICE
அனைத்துக்கும் நாடவேண்டிய இடம்

# பரன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

240 Wellesley St. E., Unit#1, Toronto, Ontario
Phone: **(416)966-1034**



# Why tough times are good times for your RRSP...



**TRIMARK *RRSP* MUTUAL FUNDS**
*Quality Investments. Trusted Leadership.*

நீங்கள் கடந்த 1982ம் ஆண்டு பொருளாதாரச் சுருக்க நேரத்தில் திறைமார்க் (Trimark Funds) ஸ்தாபனத்தில் $5,500 ஐ முதலிட்டு இருந்தால் இன்று அதன் பெறுமதி $19, 636. சராசரி வருடம் ஒன்றுக்கு 16% விகித வளர்ச்சி.

இன்று முதலீடு செய்வதற்கு நல்ல காலமா? ஆம் கஷ்ட காலங்களில் விலைகள் மலிவு ஆதாயம் அதிகம். உங்கள் RRSP யின் சிறந்த வளர்ச்சிக்கு உகந்த காலம்.

நீங்கள் ஒரு RRSP முதலீடு செய்ய முன் ஆலோசனை பெற்று நன்மை அடைய அழையுங்கள்
நிதி நிபுணர்
**யோகி தம்பிராஜா** F.C.A. F.C.M.A. (U.K)

2075 KENNEDY ROAD #608
SCARBOROUGH, ONT. M1T 3V8
**Tel: (416) 291-4400**
**(416) 269-8071** (24hrs)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோர்க் பல்கலைக் கழக இலங்கை மாணவர் மன்றம் நடத்திய "கலாசார இரவு"
# CULTURAL NIGHT



கண்ணோட்டம்:
தென்புலோலியூர்
கிருஷ்ணலிங்கம்

ஒன்ராறியோ யோர்க் பல்கலைக் கழக இலங்கை மாணவர் மன்றம் (Srilankan Students Association - York University) கலாசார இரவு என்ற பெயரில் விழா ஒன்றினை கடந்த 9ம் திகதி (மார்ச் 9, 1991) விமரிசையாக நடத்தியது. இலங்கையர்களுக்கே உரித்தான தாமதபாணியில், நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்ட நேரத்திலும் பார்க்க நாற்பது நிமிடங்கள் தாமதமாக விழா ஆரம்பமானது.

தமிழ் சிங்கள மாணவர்கள் இலங்கையர் என்ற பொதுப்பெயரின் கீழ் இணைந்து Cultural Night விழாவை ஏற்பாடு செய்திருந்தனர். "ஒற்றுமையால் உயர்வு: பிரிவினையால் தாழ்வு" என்ற கருத்துக்கு இந்த விழாவில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தது.

வரவேற்புரை நிகழ்த்திய சஞ்சயன் தமது மன்றத்தின் நோக்கங்களை விளக்கிய பின்னர், கலாசூரி அருந்ததி ஸ்ரீரங்கநாதனின் இசையில் "புஷ்பாஞ்சலி" நடனத்தை மாணவிகள் மூவர் கச்சிதமாக ஆடினர். தொடர்ந்து மூன்று சிறுமிகள் "நடேச கௌதம்" ஆடியது பார்ப்பதற்கு நன்றாக இருந்தது. இவற்றிற்குச் சிகரம் வைத்தாற்போல, ஸ்காபுரோ தமிழ் கலாசார நிலையத்தின் கலாஷேத்திர மாணவர்களான குழந்தைகளால் அளிக்கப்பட்ட வட இந்திய முறையிலான "கும்மி நடனம்" ரசிகர்களின் பாராட்டைப் பெற்றது. தொடர்ந்து எம்.எல். வசந்த குமாரியின் "பாடும் அருள் ஜோதி" பாடலுக்கு "கீர்த்தனம்" விஜியின் பாவம், ராகம், தாளம் நன்றாகவிருந்தது "உலகம் புகழும் நாட்டியக் கலையை" அளித்த வசந்தா, பத்மஸ்ரீ K.N. தண்டாயுதபாணிபிள்ளையின் மாணவிதான் என்பதை நிரூபித்துவிட்டார்.



கனடிய பாணியிலான Fashion Show முயற்சி பரவாயில்லை. உடம்பை ஒட்டிய ஆடைகளை விட்டு பட்டு வேட்டி, பட்டுப் புடவை கலாசாரத்தில் நிகழ்த்தியது புதுமையாகவிருந்தது. இந் நிகழ்ச்சியின் போது ஒரு சிறுமி தனியே வந்து துள்ளிக் குதித்து ஆடி சிறுது நேரமே காட்சி தந்து பாராட்டுதலைப் பெற்றதுடன் ரசிகர்களின் உள்ளத்திலும் இடம் பிடித்து விட்டார். பாவாடை தாவணியில் கன்னியர் தோன்றி "ஷோ" காட்டியதும் சுமாராக இருந்தது.

கதையின் பின்னணியில் பாத்திரங்களின் வசன நடையற்ற "பூதத் தம்பி" குறு நாடகம் எதிர்பார்த்தளவு வெற்றியாக அமையாவிட்டாலும் புதுமை நாடக வரிசையில் பாராட்டப்பட வேண்டிய தொன்று. கனடாவுக்கு தன் கணவனிடம் வந்து சேரும் ஒரு தமிழ்ப் பெண் இங்குள்ள சூழலில் சிக்கிச் சீரழிந்து கடைசியில் கற்பே பறி போகும் நிலையில் திருந்துவதாகக் காட்டப்பட்ட "தங்கச்சி ஊருக்குப் புதுசு" நாடகம் ரசிகர்களுக்கு ஹாஷ்ய விருந்தளித்ததுடன் "வெளிக்கிட்டி விசுவமடுவுக்கு" யாழ்ப்பாண நாடகத்தை நினைவூட்டியது. "இங்குள்ள கலாசாரத்துக்கு ஒத்துப் போகும் விதத்தில் மாறுவதில் தவறில்லை. ஆனால் நடத்தை தவறக் கூடாது" என்னும் கருத்து நாடகத்தின் முடிவில் முன்வைக்கப்பட்டது.

கடைசியாக வழங்கப்பட்ட இசை நிகழ்ச்சி ஏதோ "ஓஹோ" என்று இல்லாவிட்டாலும் நாலே நாலு இசைக் கலைஞர்கள் மட்டுமே தங்களால் முடிந்தளவு திறமையாகச் செய்தார்கள். திஸ்ஸ குணசேகராவின் ஹிட்டார் இசை அபாரம். இவர் ஹிந்திப் பாடல் பாடியபோது பாடலுடன் சேர்ந்து அனைவரும் கைதட்டிப் பங்கு பற்றியது. கலைத் திறமை எங்கிருந்தாலும் பாராட்டுவதில் தமிழர் இனமத பேதமின்றி முன் நிற்பர் என்பதை உணர்த்தியது.

இவ்விழாவில் முக்கியத்துவம் அளித்து முன் வைக்கப்பட்ட கருத்துகளில் எமக்குப் பூரண உடன்பாடு இல்லாவிடினும், 90 ஜனவரியிலே ஆரம்பித்து வைக்கப்பட்ட இம்மாணவர் மன்றத்தின் கன்னி முயற்சியைப் பாராட்ட வேண்டிய அதே நேரத்தில் சில குறைகளையும் எடுத்துக் கூறியே ஆக வேண்டும். மேடை ஒளி அமைப்பு, நடனத்திற்குச் சிறிதும் சோபிக்கவில்லை. Fashion Showவில் தோன்றிய பெண்கள் 16 முழ பட்டுச் சேலையுடுத்தி மேடையில் தோன்றினாலும் அவர்களுடைய நடை தமிழ் மகளிருக்கேயுரித்தான அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் மடந்தையருக்குரிய இலட்சணங்களைக் காட்டத் தவறி நவநாகரீக கனடிய பெண்களின் நடையையே காட்டியதும், ஐயராகத் தோன்றியவரின் உடலில் பூணூல் காணப்படாது மொட்டையாகக் காட்சியளித்ததுடன் நின்று போஸ் கொடுத்த வேளையில் பின்னணித் துள்ளிசையில் கட்டுப்பாட்டை மீறி காலால் தாளம் போடத் தொடங்கியதும், நாடகத்தில் வீரகேசரி வாசிப்பதைக் கூறி வேறு பத்திரிகையை வைத்திருந்ததுடன், வானொலியை முடுக்கியதும் இலங்கை வானொலியின் நிகழ்ச்சிகள் கனடாவிலே கேட்கக் கூடியதாக இருப்பதாகச் சித்தரிக்கப்பட்டதும் ஒரு சில உதாரணங்கள். இவை அனைத்திற்கும் மேலாக தமிழ்ப் பேச்சை நிகழ்த்திய தமிழ் மாணவி தமிழைப் பச்சையாகவே கொலை செய்ததுடன், இசை நிகழ்ச்சியின் போது ஒவ்வொரு பாடலுக்கும் இடையில் வந்து தமிழைச் சித்திரவதை செய்த தன் மூலம் ரசிகர்களே சத்தமிட்டு மேடையை விட்டு விரட்டுமளவுக்கு ரசிகர்களின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டார்.

டாக்டர் சண்முகதாஸின் பாரியாரினால் பரிசில்கள் வழங்கப்பட்டபோது, எதுவித நிகழ்ச்சிகளிலும் பங்கு பற்றாதவருக்கு பரிசில் வழங்குவதில் காட்டப்பட்ட ஆர்வம், நடன நிகழ்ச்சியில் பங்கு பற்றி பார்வையாளர்களின் பாராட்டைப் பெற்ற இரு சிறுமியருக்கு (பரிசிலே வழங்காது) காட்டப்படாதது மன வேதனைக்குரியது. இனிவரும் ஆண்டுகளில் இக்குறைகள் நிவர்த்தி செய்யப்படும் என நம்புகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● இலங்கையில் நிரந்தர யுத்தநிறுத்தம் வேண்டும் ● விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும்
● அகதிநிலை கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர்களை நாடுகடத்த எடுக்கும் நடவடிக்கைகளை நிறுத்தவேண்டும்

# கனடிய வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளுடன் கனடாதமிழர் தேசிய மன்றக்குழு நேரடிப்பேச்சு

"இலங்கைத் தமிழர்களின் பிரச்சனைக்கு நிரந்தரமான தீர்வு காணப்பட வேண்டுமானால் ஸ்ரீலங்கா அரசு முதலில் நிபந்தனையற்ற யுத்த நிறுத்தமொன்றை அமுலுக்குக் கொண்டு வரவேண்டும். அடுத்ததாக விடுதலைப்புலிகளுடன் நேரடியாகப் பேச்சு வார்த்தையை ஆரம்பிக்க வேண்டும். இதற்கு கனடிய அரசு உதவ வேண்டும்".

மேற்கண்டவாறு கனடா தமிழர் தேசிய மன்றம் (National Association of Canadian Tamils - NACT) கனடிய அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேற்படி மன்றத்தின் தூதுக்குழுவொன்று மார்ச் மாதம் 19ம் திகதி செவ்வாய்க்கிழமை ஒட்டாவாவுக்குச் சென்று, கனடிய வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளுடன் இது தொடர்பாக பேச்சு நடத்தியது.

வெளிவிவகாரத்துறை இயக்குனர்நாயகம் உட்பட இலங்கை விவகாரம், ஆசிய விவகாரங்கள் தொடர்பான நான்கு அதிகாரிகள், சுமார் மூன்று மணி நேரம் நடைபெற்ற இப்பேச்சுவார்த்தையில் பங்குபற்றினர்.

கனடா தமிழர் தேசிய மன்ற பிரதிநிதிகள் குழு, மன்றத்தின் தலைவர் திரு.நா.சிவலிங்கம் தலைமையில் சென்றிருந்தது. திருவாளர்கள் அருள்.எஸ்.அருளையா, எஸ். (திரு) திருச்செல்வம், அன்ரன் கனகசூரியர், எஸ்.சிவசுந்தரம் ஆகியோர் இக்குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

ஸ்ரீலங்கா அரசு கண்மூடித்தனமாக தமிழர்களின் பாரம்பரிய பிரதேசத்தில் நடத்தி வரும் விமானத்தாக்குதல்களால் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுவது, அங்கவீனராக்கப்படுவது, ஆயிரக்கணக்கில் வீடுகள் கட்டடங்கள் தரைமட்டமாக்கப்படுவது ஆகியனபற்றி மன்றக்குழு விபரமாக எடுத்துக்கூறியது.

உள்நாட்டில் இடம் பெயர்ந்து அகதிகளாகியுள்ள மக்களின் துயர் துடைக்க கனடா எவ்வழியாக உதவலாம் என்பது பற்றி இச்சந்திப்பில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

விடுதலைப்புலிகளுடன் ஸ்ரீலங்கா அரசு நேரடியாகப் பேசாதவரை இந்தப்பிரச்சனைக்கு தீர்வு காண முடியாது என்பதை அதிகாரிகள் ஒப்புக் கொண்டனர். இவ்விடயத்தில் கனடிய அரசு தன்னாலான பங்களிப்பைச் செய்து தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றக் கூடிய தீர்வொன்றைக்காண உதவ வேண்டும் என்று தூதுக்குழு மீண்டும் வலியுறுத்தியது.

கனடிய குடிவரவு வேலைவாய்ப்பு அமைச்சின் அகதிகள் விவகாரத்துக்குப் பொறுப்பான இயக்குனரையும், உயர் அதிகாரிகளையும் அதே தினத்தன்று பிற்பகல் மேற்படி கனடா தமிழர் தேசிய மன்றக்குழு அமைச்சு அலுவலகத்தில் சந்தித்து சுமார் 70 நிமிடங்கள் பேசியது. ஸ்பொன்சர் விண்ணப்பங்கள் கொழும்பிலுள்ள கனடிய தூதரகத்தில் மாதக்கணக்கில் தாமதமாவது, குடும்பங்கள் தாமதமின்றி மீள இணைய முடியாதவாறு பல சிரமங்களை எதிர்கொள்வது, கனடாவில் அகதிநிலை கோரிய பலரது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு அவர்களை நாடு கடத்த நடவடிக்கை எடுக்கப்படுவது ஆகியனபற்றி இங்கு ஆராயப்பட்டது.

ஸ்பொன்சர் விண்ணப்பங்கள் சுமார் 18 மாதங்கள்வரை தாமதமாவது தவிர்க்க முடியாதது என்று இங்கு அதிகாரிகள் தெரிவித்தனர். ஆயிரக்கணக்கில் விண்ணப்பங்கள் குவிந்திருப்பதால் அதுவும் கூட ஒரு Backlog - தேக்கநிலையில் மாறியுள்ளதாக அதிகாரிகள் சுட்டிக் காட்டினர்.

ஸ்ரீலங்காவில் தற்போதுள்ள பாதுகாப்பற்ற நிலைமையைக் கருத்திற் கொண்டு அகதி நிலைக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர்களை நாடு கடத்தும் நடவடிக்கைகளை காலந்தாழ்த்துவதற்கு சட்டரீதியான இணக்க நிலை (Moratorium) ஏற்படுத்த வேண்டும் என்று தூதுக் குழு கேட்டுக்கொண்டது. மனிதாபிமான அடிப்படையில் இதனைப் பரிசீலிப்பதாக அகதிகள் விவகார இயக்குனர் தூதுக் குழுவிடம் உறுதியளித்தார்.

## ● ஒரு கடிதம்

ஆசிரியர்
தமிழர் தகவல்

அன்புடையீர்,

'தமிழர் தகவல்' முதலாம் இரண்டாம் இதழ்கள் படித்தேன். தக்க நேரத்தில் தமிழர்களுக்குத் தேவையான தகவல்களை, சுருக்கமாகவும், விளக்கமாகவும், விபரமாகவும், விரும்பிப் படிக்கக் கூடிய விதத்திலும் தமிழர் தகவலை அமைத்துள்ளீர்கள்.

படிப்பைத் தொடர விரும்புவர்களுக்கான விபரங்களையும் எதிர்பார்க்கின்றோம். பிரசுரித்தால் உதவியாக இருக்கும்.

ஆலய உற்சவங்கள் பற்றிய விபரங்கள் போன்று பகவான் பாபா பஜன் நடைபெறும் இடம், காலம் பற்றியும் தயவு செய்து பிரசுரிக்கவும்.

உண்மையான
ஜோ. நாதன்
1970 Fowler Drive, Apt. 1002
Mississauga

## வேலைத்தலங்களின் பாதுகாப்பு அதிகரிப்பு

வேலைத் தலங்களின் சுகாதாரம், பாதுகாப்பு சம்பந்தமான சட்டங்களில் ஒன்ராறியோ அரசு பல மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது.

இதன் பிரகாரம் 6 பேருக்கும் 19 பேருக்கும் இடைப்பட்ட தொகை ஆட்கள் பணிபுரியும் வேலைத் தலங்களில் சுகாதார பாதுகாப்புத் துறைக்கு ஒரு பிரதிநிதி ஏற்படுத்தப்பட வேண்டும். வேலை புரிவர்கள் தங்கள் பிரதிநிதியைத் தெரிவு செய்வர்.

இருபதுக்கு மேற்பட்ட ஊழியர்கள் பணியாற்றினால் இதற்கென ஒரு குழு அமைக்கப்பட வேண்டும். கடைகள், அலுவலகங்கள், கட்டட நிர்மாணத்தலங்களையும் இது உள்ளடக்கும். மேலதிக விபரங்களை 327-0001 என்ற தொலைபேசி இலக்கத்தில் பெறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CANADIAN IMMIGRATION கனடிய குடிவரவு

தமிழ்பேசும் **கனடிய பாரிஸ்டர்களான ஜெகன் மோகன், திருமதி. தெய்வா மோகன்** ஆகியோரின் சட்ட சேவைகள் குடிவரவு சம்பந்தப்பட்ட விடயங்களைக் கவனிக்க கிடைக்கிறது.

புதிதாக வரும் அகதிகள், Backlog எனப்படும் தேக்க நிலையிலிருப்பவர்கள் ஆகிய இரு சாராரதும் கோரிக்கைகளை நாங்கள் கவனிக்கிறோம். Sponsor எனப்படும் பொறுப்பேற்றுப் பராமரிக்கும் விண்ணப்பங்கள், மற்றும் குடிவரவு மேன்முறையீட்டுச் சபை (Immigration Appeal Board) க்கு விண்ணப்பிக்கும் மேன்முறையீடுகளைத் தயாரித்து ஆஜராகின்றோம்.

குடிவரவு அகதிகள் சபையால் அகதி நிலை கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர்கள் மத்திய நீதிமன்ற (Federal Court of Appeal) அப்பீலுக்கு அனுப்பும் விண்ணப்பங்களையும் நாங்கள் கையாளுகின்றோம். அத்துடன் அகதி நிலை நிராகரிக்கப்பட்டு வெளியேற்றக் கட்டளைக்குள்ளாக்கப் பட்டவர்களின் வெளியேற்றக் கட்டளையைத் தடுத்து நிறுத்தும் பொருட்டு ஒட்டாவா குடிவரவு தலைமை அலுவலகத்துக்கும் குடிவரவு அமைச்சருக்கும் மனிதாபிமான சமர்ப்பணங்களைத் தயாரித்து வழங்குகின்றோம்.

**சட்டஉதவிப் பத்திரம் எங்களால் ஏற்கப்படும்**
**WE ACCEPT LEGAL AID CERTIFICATE**

# MOHAN & MOHAN

Scherwood Centre, 3300 McNicoll Ave., Suite 225, Scarborough, Ontario, M1V 5J6

**(416) 609-8200**

ஜெகன் என். மோகன் LL.B.
*பாரிஸ்டரும் சொலிஸிட்டரும்*

தெய்வா மோகன்
*பாரிஸ்டரும் சொலிஸிட்டரும்*



22 கரட் தங்க நகைகள் என்றதும்
உடனடியாக நினைவுக்கு வருபவை

# பாலாஸ் தங்க நகைகள்

மங்கையர் விரும்பும் மகோன்னத நகைகளின்
நம்பிக்கையான நகை வியாபாரிகள்

# பாலாஸ்

584 A பார்லிமென்ட் வீதி (வெலஸ்லி சந்தி) ரொறன்ரோ

Phone: (416) 924-7890 Fax: 924-2713




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமதி. கத்லின் ரொலமி காலமானார்

கனடாவுக்கு வந்து குடியேறும் அகதிகள், மற்றும் மனித உரிமை விவகாரங்களில் கடந்த பல வருடங்களாக முன்னணியில் நின்று பணிபுரிந்து வந்த திருமதி. கத்லின் ரொலமி (Kathleen Ptolemy) மார்ச் மாதம் 13ம் திகதி ரொறன்ரோவில் காலமானார். இவருக்கு வயது 51.

இலங்கைத் தமிழர்கள் படகில் கனடாவுக்கு வந்த சமயம் கத்லின் ஆற்றிய மகத்தான சேவை மறக்க முடியாதது. 1983ம் ஆண்டு இனக் கலவரத்தையடுத்து தமிழர்கள் பல்லாயிரக் கணக்கில் கொழும்பு அகதி முகாம்களில் தங்கியிருந்தபோது அங்கு நேரில் சென்று அகதிகள் நிலைமையினைப் பார்வையிட்டு, கனடிய அரசுக்கு விபரங்களைத் தெரிவித்தவர்களில் கத்லினும் ஒருவராவர்.

"அன்னாரின் மறைவு கனடாவில் அகதி நிலை கோரி நிற்கும் தமிழர்களைப் பொறுத்தளவில் பாரிய இழப்பு" என்று கனடா தமிழர் தேசிய மன்றத் தலைவர் திரு. நா. சிவலிங்கம் தமது அனுதாபச் செய்தியில் தெரிவித்தார்.

கனடா தமிழர் தேசிய மன்றம், ஈழத் தமிழர் தகவல் நிலையம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இறுதிச் சடங்கில் பங்குபற்றி, கத்லீனுக்குத் தங்கள் அஞ்சலியைச் செலுத்தியதுடன், அன்னாரின் கணவருக்கும், பிள்ளைகளுக்கும் தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்தனர்.

## 1990ம் ஆண்டு வருமான வரிப்பத்திரங்களை ஏப்ரல் 30க்கு முன்னர் நிரப்பி அனுப்ப வேண்டும்.

### INCOME TAX RETURNS - DEADLINE APRIL 30

1990ம் ஆண்டில் உங்களுக்கு ஏதாவது வகையில் வருமானம் கிடைத்ததா? கிடைத்ததாயின் அதற்கான விபரங்களையும், உங்களுக்கு ஏற்பட்ட செலவினங்களையும் நீங்கள் அறிவிக்க வேண்டிய காலம் இதுதான்.

இவ்வாறு அறிவிப்பதை Income Tax Returns என்று இங்கு கூறுகின்றனர். 1990ம் ஆண்டின் ஜனவரி மாதம் முதல் மார்கழி வரையான பன்னிரண்டு மாதங்களும் உங்களுக்குக் கிடைத்த வருமானத்தையும், செலவு விபரங்களையும் ஏப்ரல் 30ம் திகதிக்கு முன்னர் எழுத்தில் சமர்ப்பிக்க வேண்டும். இதற்கென விஷேச பத்திரங்கள் உண்டு. இந்தப் பத்திரங்களை தபால் நிலையங்களில் இலவசமாகப் பெறலாம்.

வரவு-செலவு ஆகிய விபரங்களைக் கணக்கிட்டு, உங்களிடமிருந்து ஏற்கனவே கழிக்கப்பட்ட வரிப்பணத்தில் மிகுதி காணப்பட்டால் அதனை Revenue Canada அனுப்பி வைக்கும். மேலதிகமாக நீங்கள் வரிசெலுத்த வேண்டியிருந்தால் அதனை அறிவிப்பார்கள்.

நீங்கள் மேலதிகமான வரி செலுத்த வேண்டி இருக்குமானால், ஏப்ரல் 30ம் திகதிக்கு முன்னர் மறவாது பத்திரங்களைப் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும். தாமதமாக அனுப்பினால் அதற்குத் தண்டம் விதிக்கப்படும்.

வரி மதிப்பீட்டுத் துறையில் அனுபவம் பெற்ற சிலர் தனியாகவும், கம்பனிகள் மூலமாகவும் வரி மதிப்பீட்டுப் பத்திரங்களைப் பூர்த்தி செய்து வழங்குகின்றனர். இதற்கென அவர்கள் கட்டணம் அறவிடுகின்றனர்.

சில இடங்களில் இலவசமாக சேவை அடிப்படையில் இதனைச் செய்து வழங்கும் நிறுவனங்களும் இயங்குகின்றன. இவைகளை Income Tax Clinics என்று கூறுவர். நூலகங்கள், சமூக தகவல் நிலையங்கள், குடிவரவு, சட்ட உதவி நிலையங்களில் இது தொடர்பான தகவல்களைப் பெறமுடியும்.

பத்திரங்களைப் பூர்த்தி செய்து அனுப்பும் காலத்திலிருந்து ஆகக் குறைந்தது 8 வாரங்களின் பின்னரே மிகுதிப் பணத்தைப் பெற முடியும்.

தற்போது Revenue Canada வில் பணிபுரியும் ஊழியர்கள் பலர் சட்டப்படி வேலை செய்யும் இயக்கத்தில் ஈடுபட்டுள்ளனர். இவர்களது இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக மேலதிக வரிப் பணத்தைத் திருப்பி வழங்கும் பணிகள் எதிர்பாராத அளவில் தாமதமாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

திருமணமா? ருதுசாந்தி வைபவமா?
உங்கள் இல்லங்களின் மங்கள நிகழ்ச்சி எதுவானாலென்ன?

ஸ்ரீ சிவா தங்க நகைகளை
மறந்து விடாதீர்கள்

அழகுக்கு அழகூட்டும் ஆபரணங்களை
கண்ணைக் கவரும் வண்ண வண்ண வடிவங்களில்
வடித்துத் தருபவர்கள்

ஸ்ரீ சிவா ஜுவலறி

721 Bloor St. W, Suite 2C, Toronto, Ontario
(416) 531-4867



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org